ISSN 1391-9504

Vijey விஜய்

# விஜய்

29.06.2016 - மலர் 13, இதழ் 18

# தேசிய நாமல் பூங்கா

## சிறப்பு அம்சங்கள்...









**சிறுவயது முதல் நோயற்ற வாழ்வை வாழ்வோம்...**





**உலகின் மிக நீளமான ரெயில் சுரங்கப் பாதை**


**'இன்டர்போல்' சேவை உருவான விதம்**




விலை ரூபா 15/-

**மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1. இந்தப் படத்திற்குப் பொருத்தமான தலைப்பாக அமையக்கூடியது;

1. சண்டையிடும் சிறுவர்கள்
2. மகிழ்ச்சியான சிறுவர்கள்
3. சிறுவர் விளையாட்டுப் போட்டி

2. சிறுவர்கள் நாம் ........................ மதித்து நடப்போம்.

1. சிறியோரை 2. நண்பர்களை 3. பெரியோரை

3. சிறுவர்களாகிய உங்களது நாளாந்தக் கடமைகள் 3 தருக.

........................................

........................................

........................................



1. இலக்கங்களின் பெயர்களை அவற்றுக்குக் கீழே எழுதுக.

2. இரட்டை இலக்கங்களைக் குறிப்பிடுக.

........................................



3. 5, 9 ஆகிய இலக்கங்களின் ஆங்கிலப் பெயரை எழுதுக.

5 - ........................ 9 - ........................

4. 7 ஆம் இலக்கத்தைப் பார்த்தால் நினைவில் வரும் விலங்கு எது?

1. சிங்கம் 2. யானை 3. ஒட்டகச்சிவிங்கி

1. இங்கிருக்கும் வாகனங்களை வகைப்படுத்துக.

தரை வழி: ........................................

கடல் வழி: ........................................

வான் வழி: ........................................




2. இலங்கையில் பாவனையிலுள்ள பொதுப் போக்குவரத்து சேவைகள் 2 தருக.


........................................

3. இங்கிருப்பவற்றில் எரிபொருள் பயன்பாடு இல்லாமல் செலுத்தக்கூடிய போக்குவரத்து சாதனங்கள் ஏதும் இருக்கின்றனவா? அவற்றைக் குறிப்பிடுக.

........................................

1. பழங்களிலிருந்து தயாரிக்கப்படும் பானம்;

1. பழச்சாறு
2. தேநீர்
3. பழப்பாகு



2. வீட்டுத் தோட்டத்தில் பயிரிட்டுப் பயன்பெறக்கூடிய பழ வகைகள் 4 தருக.

........................................

3. படத்தில் காணப்படும் பழங்களில், நீங்கள் அறிந்த பழங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

........................................

-ஜீறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# தியாக மனப்பான்மையுடன் உதவிகளை செய்திடுவோம்

கட்டடங்கள், வாகனங்கள், சொத்து சுகங்கள், நவீன உபகரணங்கள் காரணமாக, மனித வாழ்க்கை என்பது சுயநலம் மிக்கதாக மாறியுள்ளது. இத்தகைய சுகபோகங்களை அனுபவிக்க முடியாத சிலர், அவற்றை அடைவதற்காக நல்வழியிலும் தீயவழியிலும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். பேராசைகள், துவேச உணர்வு, மற்றவர்களைப் புண்படுத்தும் விதத்திலான செயல்கள் போன்ற துர்க்குணங்கள் சமூகத்தில் ஓங்கியுள்ள அதேவேளை, உதவிடும் மனப்பான்மை, பொதுநலம், அன்பு, கருணை, இரக்கம் போன்ற நற்குணங்கள் சமூகத்தில் இருந்து அருகிவருகின்றன.

எனினும், எமது நாட்டில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களின்போது, பலரும் தியாக மனப்பான்மையுடன் உதவிகள் பலவற்றை செய்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இன,மதபேதமின்றி தியாக மனப்பான்மையுடன் ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற உதவிகளை செய்தனர். இது சமூகத்தில் பரவலாக பேசப்பட்ட - வரவேற்கப்பட்ட ஒரு விடயமாக இருந்தது. அந்தவகையில், தியாக மனப்பான்மை என்பது, வாழ்க்கையின் ஓர் அங்கம் என்பதனை அறிந்து கொள்ள முடிகின்றது.

இது ஓர் உயர்ந்த நற்குணமாகும். இந்த நற்பண்பினை பிள்ளைகளாகிய நீங்களும் கடைப்பிடித்து வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.


ஒவ்வொரு மதமும் துன்புற்றவர்களுக்கு உதவு மாறு கோருகின்றது. பிறருக்கு ஆபத்து நேர்ந்தால் உதவிக்கரம் நீட்டுமாறு அறிவுறுத்துகின்றது. நாம் வாழும் போது, எவ்வளவு சொத்துக்களையும் சுகங்களையும் சேர்த்தாலும் பயனில்லை. காரணம்,நாம் இறக்கும் போது அவற்றை எடுத்துச் செல்லப்போவது இல்லை. ஆனால், தியாக மனப்பான்மையுடன் எந்தவிதமான எதிர்பார்ப்புமின்றி நாம் செய்யும் நற்காரியங்கள் என்றுமே பலன்கொடுக்கும். ஆகவே, உதவிகள் தேவைப்படுகின்றவர்களுக்கு உதவிடத் தயங்காதீர்கள்.

பிள்ளைகளே! வாழ்க்கையில் செல்வத்தை சேர்ப்பதைவிட, உதவிகள் தேவைப்படுவோருக்கு தியாக மனப்பான்மையுடன் அவற்றை வழங்கிடுங்கள். இதில்தான் உண்மையான மன அமைதி இருக்கின்றது. நீங்களும் அதனை முயற்சித்துப் பாருங்கள். சிறுபிராயத்திலிருந்தே தியாக மனப்பான்மையை வளர்த்துக் கொள்வதனால், தன்னலமற்ற வாழ்க்கையை திருப்தியுடன் வாழக்கூடியதாக இருக்கும்.

> 'தியாக மனப்பான்மையுடன் எந்தவிதமான எதிர்பார்ப்புமின்றி நாம் செய்யும் நற்காரியங்கள் என்றுமே பலன் கொடுக்கும்'





விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி
கொழும்பு -02
தொலைபேசி 2479653
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்பு



பழனிச்சாமி சோம்பேறியாகத் தனது வாழ்வை வாழ்ந்தான். அவனுக்கு வேலை செய்யாமலேயே நிறையப் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. ஒருநாள் முனிவர் ஒருவரை சந்தித்த பழனிச்சாமி "ஐயா உங்கள் சக்தியைப் பற்றி ஊர் முழுவதும் நல்ல விதமாகப் பேசுகின்றார்கள். உங்களால் என் எண்ணத்திற்கு உதவமுடியுமா...?" என்று தன் எண்ணத்தையும் விளக்கப்படுத்தினான்.

அனைத்தும் அறிந்த முனிவர், பழனிச்சாமிக்கு தன் சக்தியால் பெற்ற ஆயிரம் தங்கக் காசுகளை இன்முகத்துடன் கொடுத்து "இதை வைத்து மகிழ்வுடன் வாழ்க்கையை நடத்து" என்று கூறி அனுப்பி வைத்தார். ஆனால், அன்றிரவே தன் சீடனை பழனிச்சாமி இல்லத்திற்கு அனுப்பித் தான் கொடுத்த தங்கக் காசுகளை எடுத்து வரச் சொன்னார். காலையில் பழனிச்சாமி கவலையாக முனிவரிடம் வந்து பொற்காசுகள் தொலைந்த விஷயத்தை அழுதுகொண்டே கூறினான். உடனே முனிவர் "நான் சொல்லும் வேலைகளை நீ செய்தால் உனக்கு மீண்டும் ஆயிரம் தங்கக் காசுகளைத் தருகிறேன்" என்றார்.

"என்ன வேலை செய்ய வேண்டும்?" என்று கேட்டான் பழனிச்சாமி. அதற்கு முனிவர் "என் ஆசிரமத்திற்கு அருகிலுள்ள ஒரு ஏக்கர் நிலத்தைப் பண்படுத்தி நீர்பாய்ச்சி நெல்விதைகளை விதைக்க வேண்டும்" இவையனைத்தும் சிறப்பாகச் செய்து அறுவடையை நீ செய்யும்போது, உனக்கு ஆயிரம் தங்கக் காசுகளும் சிலவேளை அதற்கு மேலும் தங்கக் காசுகள் கிடைக்கும்" என்றார். அதிகமாக தங்கக் காசுகள் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் மகிழ்வுடன் சம்மதித்தான் பழனிச்சாமி. மூன்று மாதங்களாக முனிவர் கூறியபடி நிலத்தைப் பண்படுத்தியதால் நெல் அமோகமாக விளைந்தது. அறுவடை முடிந்தது. இதனைக் கண்ட முனிவர் பழனிச்சாமியை வரவழைத்துப் பேசியபடி ஆயிரம் தங்கக் காசுகளை வழங்கியதுடன், கூடுதலாக இரு மடங்கு தங்கக் காசுகளையும் வழங்கினார்.

**'அன்றிரவே தன் சீடனை பழனிச்சாமி இல்லத்திற்கு அனுப்பித் தான் கொடுத்த தங்கக் காசுகளை எடுத்து வரச் சொன்னார் முனிவர்'**

பழனிச்சாமி முனிவரை திகைப்புடன் பார்த்தான். "என்ன திகைப்புடன் பார்க்கிறாய்? உன் வேலைக்கு சம்பளமாக நான் தரும் பொற்காசுகள் ஒரு பங்கு என்றால் உன் மூன்று மாத உழைப்பின் பலனாக விளைந்த நெல் தந்த பொன் அதைவிட இரு மடங்கு அதிகம். அதுவும் உனக்குத்தான் சொந்தம்" என்றார் முனிவர்.

சோம்பேறியாக இருந்த பழனிச்சாமி உழைப்பின் அருமையை உணர்ந்தான். முனிவருக்கு நன்றி கூறி, "இனி உழைத்து முன்னேறுவேன்!" என்று உறுதிமொழி கூறி முனிவரிடமிருந்து மகிழ்வுடன் விடை பெற்றான்.

# பாசம்



திலோஷன் தனது பெற்றோர் தமது பாட்டியை பெரும் சுமையாக எண்ணி முதியோர் இல்லத்தில் சேர்க்க முடிவு எடுத்துள்ளார்களே என்று கவலையுடன் அறையில் அமர்ந்திருந்தான். என் பாட்டி எவ்வளவு நல்லவள் நான் பள்ளிவிட்டு வீடு சென்றதும் அன்பாகப் பார்த்துக் கொள்வாள். என்னை "என் செல்லம், ராஜா மாதிரி இருக்க" என்று கூறி இனி யார் என்னை மகிழ்விப்பார் என்று எண்ணிக்கொண்டு இருந்தான். திலோஷன் மேலும் பாட்டியை எப்படி முதியோர் இல்லத் துக்குப் போகவிடாமல் தடுப்பது? என்று யோசித்தான். இன்று இரவு அப்பாவிடம் பேசியாக வேண்டும் என்று உறுதியுடன் அப்பாவின் வருகையை எதிர்பார்த்தான் திலோஷன்.

அப்பாவும் வேலை விட்டு வந்து தன் வேலைகளை முடித்துவிட்ட பின்னர், அனைவரும் சாப்பாட்டு மேசையில் ஒன்றாக அமர்ந்தார்கள். அப்பாவிடம் பேச்சுக் கொடுத்தான் திலோஷன்.

"அப்பா ஆலமரத்திற்கு ஏன் இத்தனை விழுதுகள் இருக்கு?" என்று கேட்டான்.

"வயதான காலத்தில் தாய் மரத்தைத் தாங்கிப் பிடிக்கத்தான்" என்றார் அப்பா.

"அப்படின்னா வயதான காலத்தில் பெற்றோரைப் பார்த்துக்கொள்வது பிள்ளைகளின் கடமை தானே அப்பா" என்று கேட்டான் திலோஷன். "ஆமாண்டா கண்ணா, எங்களுக்கு வயதான பின்னர் நீதான் எங்களை பார்த்துக்கொள்ளனும்" என்றார் அப்பா. "ஆனா நீங்க மட்டும் ஏன் பாட்டியை முதியோர் இல்லத்தில் சேர்க்கப் போறிங்க"?

**'இன்று இரவு அப்பாவிடம் பேசியாக வேண்டும் என்று உறுதியுடன் அப்பாவின் வருகையை எதிர்பார்த்தான் திலோஷன்'**


திலோஷனின் கேள்வியால் திகைத்துப்போன திலோஷனின் அப்பா தன் மகனின் முகத்தைப் பார்த்து வெட்கித் தலை குனிந்தார்.

சிறிது நேரம் யோசித்து விட்டு திலோஷனின் அருகில் சென்று "கண்ணா கோபமா? இனிமே பாட்டி நம்ம கூடத்தான் இருப்பாங்க. முதியோர் இல்லத்திற்கு போக மாட்டாங்க" என்றார். "நன்றி அப்பா... நன்றி அம்மா" என்று இருவரின் கன்னத்தில் முத்தமிட்டு விட்டு, ஓடிச் சென்று பாட்டியை பாசத்தோடு கட்டியணைத்தான் திலோஷன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனித வாழ்க்கைக்கான சிறந்த பயிற்சிக் காலமே புனித ரமழான்



அல்லாஹுத்தஆலாவின் அருட்கொடைகள் நிறைந்த கண்ணியம் மிக்க ரமழான் மாதமே இது. உலகவாழ் முஸ்லிம்கள் அனைவரும் இந்த மாதம் முழுவதும் அல்லாஹுத்தஆலாவுக்காக நோன்பு நோற்பது கட்டாயக் கடமையாகும். புனித நோன்பின்மூலம் அடையக் கூடிய நன்மைகள் ஏராளம். நோன்பானது உடல், உள, ஆன்மிக ரீதியாக பயனளிப்பதாகவும் நன்மைகள் அளிப்பதாகவுமே உள்ளது.

ஐவேளை தொழுகைகளுடன், சுன்னத்தான தொழுகைகளையும் அதிகம் நிறைவேற்றக்கூடிய சந்தர்ப்பம் ரமழானில் கிடைக்கின்றது. நாம் செய்த பாவங்களுக்காக அல்லாஹுத்தஆலாவிடம் பாவமன்னிப்புப் பெறக் கூடிய மாதமாகவும் பிரார்த்தனைகள் அங்கீகரிக்கப்படும் மாதமாகவும் இது காணப்படுகின்றது. நரக வேதனைகளிலிருந்து விடுதலை பெறக்கூடிய மாதமாகவும் ரமழான் உள்ளது. எனவே, அருள் நிறைந்த இந்த ரமழானின் ஒவ்வொரு செக்கனையும் இறையச்சத்துடனும் நன்மையான காரியங்களுக்காகவும் செலவழிக்க வேண்டும். அதிகளவு தர்மங்கள், உதவிகள் செய்ய வேண்டும். பொருட்களால் மட்டும்தான் உதவிகள் என்றில்லை. வார்த்தைகளால்கூட அந்த உதவிகள் அமையலாம். நல்ல வார்த்தைகளையே பேசுங்கள். வீண் பேச்சுக்கள், பொய் பேசுதல், புறம் பேசுதல், மற்றவர்களை நோகடிக்கும் வார்த்தைகள் என்பனவற்றை தவிர்த்துக்கொள்ளுங்கள்.

எமது வாழ்நாட்களில் நாம் செய்யும்



பாவங்களிலிருந்து விடுபட்டு, வருடத்திற்கு ஒருமுறை நம்மை சுத்திகரித்துக்கொள்ளக்கூடிய வாய்ப்பையும் இந்த ரமழான் மாதம் நமக்கு வழங்குகின்றது. அத்தகைய சிறப்பு மிக்க மாதத்தின் இறுதிப் பத்து தினங்களை நாம் அடைந்திருக்கின்றோம். எனவே, எஞ்சியிருக்கும் தினங்களையும் அல்லாஹுத்தஆலாவின் திருப்தியை அதிகம் பெறக்கூடிய நன்மையான செயல்களுக்காக நம்மை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும்.

ரமழானின் இறுதிப் பத்து நாட்களில்தான் ஆயிரம் மாதங்களைவிடச் சிறந்த இரவு (லைலத்துல் கத்ர்) அமைந்துள்ளது. இந்த தினத்தில்தான் மனிதர்களுக்கு முழுமையான வழிகாட்டியாகவும் நன்மை - தீமைகளைப் பிரித்து அறிவிப்பதுமான அல்குர்ஆன் அருளப்பட்டது. எனவே, ரமழான் அல்குர்ஆனின் மாதம். அதனை அதிகம் ஓதி-மனனமிட்டு- அதன் கருத்துக்களை அறிந்து கொள்ள முயற்சிப்பதனூடாக, அல்குர்ஆனுடனான எமது தொடர்பு பலப்படுத்தப்படும். அல்குர்ஆனை கருத்து விளங்கி ஓதும்போது, எமது வாழ்க்கையை நெறிப்படுத்திக் கொள்வதற்கு வழிகாட்டப்படுகின்றது. அதன்மூலம் அல்லாஹுத்தஆலாவின் திருப்தியைப் பெற்ற அடியார்களாக நாம் மாறுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கின்றது.




எமது சிந்தனைகள், எண்ணங்கள், ஆசைகள், உணர்ச்சிகள், விருப்பு - வெறுப்புக்கள் என அனைத்தும் ரமழானில் நெறிப்படுத்தப்படுகின்றன. ரமழான் இறையச்சத்தை தோற்றுவிக்கும் காலமாகும். இதனால், தீயவற்றிலிருந்து எம்மை விடுவித்துக்கொள்ளவும் நன்மையான காரியங்களில் நம்மை அதிகம் ஈடுபடுத்திக் கொள்வதற்குமான பயிற்சிகளை இந்த மாதம் நமக்கு வழங்குகின்றது. இதனை முழு வாழ்க்கைக்குமான பயிற்சியாகக்கொண்டு அல்லாஹுத்தஆலாவின் விருப்பத்திற்குரிய நல்லடியார்களாக வாழ புனித ரமழான் மாதத்தை சிறந்த காலமாக அமைத்துக் கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சிறு வயது முதல் நாம் ஆரோக்கிய மாக வாழ்வதற்காக சில வழிமுறைகள் உள்ளன. அவை பற்றிய விபரங்களே இவை...

# சிறு வயது முதல் நோயற்ற வாழ்வை வாழ்வோம்



## அடிக்கடி உணவினை உட்கொள்வது தீமையை விளைவிக்கும்

பிள்ளைகளாகிய நீங்கள் அடிக்கடி உணவினை உட்கொள்வது தீமையையே விளைவிக்கும். ஏனினும், நீங்கள் அடிக்கடி உணவினை உண்பதையே அதிகம் விரும்புகிறீர்கள். இந்தப் பழக்கம் தொடர்ந்தால் அது ஆரோக்கிய வாழ்விற்கு நன்மை விளைவிக்காது. இதனால், நீரிழிவு, அதிக பருமன், இருதய நோய் உள்ளிட்ட பல நோய்கள் ஏற்பட வாய்ப்புண்டு. அதுமட்டுமன்றி இந்நோய்கள் பரம்பரையாக உங்கள் குடும்ப அங்கத்தவர்களிடையே இருந்தால் நீங்கள் இளம் வயது முதலே உணவுக் கட்டுப்பாட்டினை மேற்கொள்வது அவசியமாகும்.

## சில உணவுகளில் அவதானம் தேவை

நீங்கள் இறைச்சி, பால், முட்டை உள்ளிட்ட அனைத்து மாமிச உணவு வகைகளை உண்பதைக் குறைத்துக்கொள்ளுங்கள். அத்தோடு, இறால், நண்டு போன்ற கடல் உணவுகளை தவிர்ப்பதும் சிறந்ததாகும். வெண்ணெய்க் கட்டி (சீஸ்), பட்டர் போன்ற உணவுகளை நிறுத்துவதுடன், உணவில் எண்ணெய் வகைகளை குறைவாகப் பயன்படுத்துவதும் சாலச் சிறந்ததாகும். அத்தோடு, இனிப்புப் பண்டங்களை உண்பதையும் கண்டிப்பாக கட்டுப் படுத்த வேண்டும்.

## உண்ண வேண்டியவை

நெத்தலி, சாலை போன்ற சிறிய மீன் வகைகளை உண்பது மிகவும் சிறந்ததாகும். தானிய வகைகளையும் தவிடு நீக்காத அரிசி, காய்கறிகள், கீரை வகைகள், வெள்ளைப் பூண்டு, குரக்கன் மாவில் செய்த உணவுகள் உங்கள் ஆரோக்கிய வாழ்வுக்குரிய உணவுகள் ஆகும். இதேவேளை, இரவு மற்றும் காலை வேளைகளில் உணவினை தவிர்ப்பதும் உடல் நலத்திற்கு ஆபத்தானதாகும்.



## தேங்காய் நீரை வீச வேண்டாம்

தேங்காயில் உள்ள நீர் சிறந்த மருத்துவக் குணங்கள் கொண்ட குளிர்ச்சியான பானமாகும். சில நாடுகளில் இந்த நீரை போத்தலில் அடைத்தும் விற்பனை செய்கின்றனர். இந்நீரை அருந்துவதன்மூலம் உடலில் ஏற்படும் வரட்சியை தடுக்கலாம். அத்தோடு, சீனி உட்பட பல்வேறுபட்ட கனியங்களும் தேங்காய் நீரில் அடங்கியுள்ளது.

தேங்காய் நீர் வயிற்றோட்டத்தை தடுக்கும் மிகச் சிறந்த மருந்தாகவும் உள்ளது. அத்தோடு, தைரொக்சீன் குறைபாட்டால் அவதியுறுவோருக்கும் இது சிறந்த மருந்தாகும். இதில் பொட்டாசியம், விட்டமின் C, சிறிது அமிலம் ஆகியன அடங்கியிருப்பதோடு, மெக்னீசியம், துத்தநாகம், கல்சியம், இரும்பு ஆகிய போஷாக்குகளும் அடங்கியுள்ளன.






**நீங்கள் சிறு வயதில் அடிக்கடி உணவினை உண்பதையே விரும்புகிறீர்கள். ஆனால், அதே பழக்கம் தொடர்ந்தால் அது ஆரோக்கிய வாழ்விற்கு நன்மை விளைவிக்காது. இதனால், நீரிழிவு, அதிக பருமன், இருதய நோய் உள்ளிட்ட பல நோய்கள் ஏற்பட வாய்ப்புண்டு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறப்பு அடையாளம்

பிறப்பு அடையாளம் என்பது பிறக்கும் போதே உள்ள மச்சம் உள்ளிட்ட சில அடையாளங்களாகும். இந்த பிறப்பு அடையாளங்கள் சிலகாலம் சென்றதும் அழிந்துவிடும். நமது தோலின் கீழ் உள்ள இரத்த நாளங்கள் முறையாக வளர்ச்சியடையாத காரணத்தால் பிறப்பு அடையாளங்கள் ஏற்படுகின்றன. இவற்றில் பெரும்பாலானவை எவ்வித வேதனையும் தருவதில்லை. எனினும், சிலவேளைகளில் அது வேறு நோய்களுக்கான அறிகுறியாகவும் இருக்கலாம். இதனால், பிறப்பு அடையாளங்கள் காலங்கள் செல்ல மாற்றம் அடைந்தால் விரைவாக வைத்தியரின் ஆலோசனையைப் பெறுவது நலமானதாகும்.

## மனதை வருத்தும் பருக்கள்

பருக்கள் என்பது தோலில் ஏற்படும் ஒரு வகை சிறிய கட்டிகளாகும். இவை நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்களுக்கு ஏற்பட



நெத்தலி, சாலை போன்ற சிறிய மீன்வகைகளை உண்பது மிகவும் சிறந்ததாகும். தானிய வகைகளையும் தவிடு நீக்காத அரிசி, காய்கறிகள், கீரை வகைகள், வெள்ளைப் பூண்டு, குரக்கன் மாவில் செய்த உணவுகள் உங்கள் ஆரோக்கிய வாழ்வுக்குரிய உணவுகள் ஆகும்.



வாய்ப்புகள் உள்ளன. இவை தோலின் நிறத்தைக் கொண்டிருந்தாலும் இவை சுகமடையும்போது, கறுப்பு நிறப் புள்ளிகளாக மாறும். அதனால், இவற்றை தடுப்பதற்கு தகுந்த வைத்தியரிடம் ஆலோசனைகளைப் பெறுவது அவசியமானதாகும். மாறாக நீங்களாகவே பருக்களை தடுக்க அல்லது அழிக்க முயற்சிக்கக் கூடாது. சிலவேளைகளில் இத்தகைய செயற்பாடுகள் ஆபத்தாகவும் அமையலாம்.

(-அ)

## தெரிந்து கொள்வோம்



★ 2016 இல் பிலிப்பைன்ஸ் நாட்டின் ஜனாதிபதியாக தெரிவாகியுள்ளவர் யார்? அவரின் பதவிக்காலம் எத்தனை வருடம்?

ரொட்ரிகோ டுட்டேர்டே.
4 வருடம்



★ அணு குண்டினால் பாதிப்படைந்த நகரமான ஹிரோசிமாவிற்கு விஜயம் செய்த ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி யார்? எந்த ஆண்டு இந்நிகழ்வு நடைபெற்றது?

பராக் ஒபாமா.
2016 ஆம் ஆண்டு



★ உலகில் ஊழல் தரவரிசையில் முன்னணியிலுள்ள முதல் மூன்று நாடுகள் எவை?

i. சோமாலியா
ii. நைஜீரியா
iii. ஆப்கானிஸ்தான்



★ 'நவீன சிங்கப்பூரை உருவாக்கிய சிற்பி' என அழைக்கப்படுபவர் யார்?

லீகுவான் யூ

★ ஐங்குரவர்கள் யாவர்?

மாதா, பிதா, குரு, அரசன், தமயன்





★ இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவி வகித்தவர்களில் மிகக்கூடிய காலம் பதவியிலிருந்தவர்கள் யார்? எப்போது?

i. ஜயவர்தன. 1977-1989
ii. சந்திரிகா குமாரதுங்க 1994 - 2005
iii. மகிந்த ராஜபக்ஷ 2005-2015



★ உலகிலேயே 1 வருட ஜனாதிபதி பதவிக் காலம் கொண்ட நாடு எது?

சுவீட்சர்லாந்து



★ உலகில் முதன் முதலில் நாட்காட்டியை உருவாக்கியவர்கள் யார்?

பெபிலோனியாவில் வாழ்ந்த சுமேரியர். 5000 வருடங்களுக்கு முன்னர்

★ அதிகூடிய தீவுகளை உள்ளடக்கிய நாடு எது?

இந்தோனேஷியா



★ பறக்கும் விமானத்தின் உயரத்தை அளக்கும் கருவியின் பெயர் என்ன?

ஆல்டி மீற்றர்

தொகுப்பு: உடுவை பாந்தாமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னோடி வினாப்பத்திரம் (பகுதி-I)

பெயர்: ................................................

கீழ் காணும் வினாக்களுக்கு சரியான விடையை தெரிந்து அதன்கீழ் கீறிடுக.

★ *1 ஆம், 2 ஆம்* வினாக்களில் பொருத்தமற்ற உருவின் கீழ் கோடிடுக.

01.



1. 2. 3.

02.



1. 2. 3.

03. ஒருவர் ஓர் இடத்தில் இருந்து மேற்கு நோக்கி 10km சென்று பின்னர் வடக்கு நோக்கி 520km செல்கிறார் எனின், அவர் சென்ற மொத்தத் தூரம் யாது?

1. 510km 2. 530km 3. 540km

04. கருத்தரங்கு ஒன்று மு.ப. 9:30 இற்கு ஆரம்பமாகி பி.ப. 4:20 மணிக்கு முடிவடைந்தது எனின், கருத்தரங்கு எவ்வளவு மணி நேரம் நடைபெற்றது?

1. 6.50 மணித்தியாலம் 2. 6.00 மணித்தியாலம்
3. 6.40 மணித்தியாலம்

05. $\frac{4}{12}$ இந்தப் பின்னத்திற்குப் பொருத்தமான சமவலுப் பின்னம் யாது?

1. $\frac{4}{24}$ 2. $\frac{1}{6}$ 3. $\frac{1}{3}$

★ கீழுள்ள தரவுகளை அவதானித்து, அடுத்து வரும் வினாக்களுக்கு விடை தருக.



ரூபா 25 ரூபா 40.00 ரூபா 45.00

06. தோடம்பழம் 4 இன் விலை யாது?

1. ரூபா 60.00 2. ரூபா 40.00 3. ரூபா 55.00

07. மாம்பழங்கள் 10 இன் விலை என்ன?

1. ரூபா 150.00 2. ரூபா 100.00 3. ரூபா 75.00




08. அன்னாசிப் பழம் ஒன்றினதும் தோடம்பழம் இரண்டினதும் விலை யாது?

1. ரூபா 40.00 2. ரூபா 50.00 3. ரூபா 60.00

09. சரியான சொல்லை தெரிவு செய்க.

1. குருதட்சணை 2. குருதட்சனை 3. குறுதட்சனை

10. மூவாயிரத்தை உள்ளடக்கிய எண் யாது?

1. 4155 2. 2991 3. 2356

11. பாம்பு, நத்தை, அட்டை இவை யாவும் எவ்வகை உயிரினத்துக்குள் அடங்கும்?

1. ஊர்வன 2. ஈரூடகவாழி
3. இரவில் நடமாடும் பிராணி

12. வௌவால், திமிங்கிலம், பூனை இவை யாவும் அடங்கும் உயிரின வகை;

1. மிருகங்கள் 2. பாலூட்டிகள் 3. பட்சிகள்

13. | அன்பு - தாய் | எனின் | கல்வி - ................. |

1. புத்தகம் 2. ஆசிரியர் 3. பாடசாலை

**(விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)**

## முன்னோடி வினாப்பத்திரம் (பகுதி-II)

**(ஜூன் 22 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)**

*01)* **1.** கிராமம்/ கிராமத்து வீடு
**2.** பசு, ஆடு, மாடு, மாட்டு வண்டி
**3.** முற்றம்/ வீடு **4.** நெல்
**5.** வைக்கப்பட்டிருந்தது/ காணப்பட்டது

*02)* **1.** உலோபி **2.** விதவை **3.** அனாதை

*03)* **1.** உயர்திணை படர்க்கை **2.** உழுதான்

*04)* **1.** நாங்கள் எங்கள் கால்களை கழுவுவோம்
**2.** அவர்கள் எனது வகுப்பு நண்பர்கள்

*05)* **1.** நாங்கள் வைத்தியசாலைக்கு செல்வோம்
**2.** எனது அம்மா ஓர் ஆசிரியை

*06)* *1. 2* *2. 1* *3. 2* *4. 4* *5. 3*
*6. 4* *7. 4* *8. 3* *9. 1* *10. 4*

Digitized by Noolaham Foundation.

# கறுப்பு - வெள்ளை தொலைக்காட்சி வர்ண ஒளிபரப்பாக மாறியமை

ஊடக பாடநெறி பாடம் - 110






தொலைக்காட்சியின் பாவனை உலகளாவிய அளவில் ஓரளவு பரவத் தொடங்கிய காலகட்டங்களில் மக்களுக்கு புதுமையான ஒரு அனுபவமாகவே அது இருந்தது. இதுவரை காலமும் வானொலியில் ஒலி வடிவில் செவிமடுக்கப்பட்டவையெல்லாம் இனி காட்சி வடிவில் காணமுடிகின்றதே என்ற ஆச்சரியம் அவர்கள் மத்தியில் மேலோங்கியிருந்தது. அது மட்டுமல்ல, உலகத்தையே தமது வீட்டுக்குள்ளேயே காண முடிகின்றதே என்ற மகிழ்ச்சியும் அவர்களிடம் மேலோங்கியிருந்தது.

ஒருசிலரது வீடுகளில் மாத்திரமே தொலைக்காட்சி அப்போது இருந்தமையால் அதுவோர் ஆடம்பரப் பொருள் போன்றே அமைந்திருந்தது. அது மட்டுமன்றி, வீட்டில் தொலைக்காட்சி வைத்திருந் தவர்களில் அநேகம்பேர் தமது சுற்றத்திலும் உள்ள ஏனையவர்களும் கண்டு களிப்பதற்கு வசதியாக தமது வீட்டுத் தொலைக்காட்சியை வெளிவாசலில் வைத்தனர். இதனால், ஊரவர்களும் ஆச்சரியம் கலந்த ரசனையுடன் தொலைக்காட்சியை கண்டுகளித்தனர். ஆரம்ப காலங்களில் இப்போது இருப்பது போல் பல்வேறு தரப்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் இருக்கவில்லை. 'மப்பட் ஷோ' எனப்படும் பொம்மைகளின் கதை, கார்ட்டூன் மற்றும் விவரணங்கள் ஆகியனவே அதிகப்படியாக ஒளிபரப்பாகின. அதிலும். குறிப்பாக, இந்த ஒளிபரப்புக்கள் கறுப்பு வெள்ளை ஒளிபரப்பாகவே இருந்தது. அதுவொரு புதிய அனுபவமாகவே அமைந்தது. வர்ணத் தொலைக்காட்சிக்கான கண்டுபிடிப்புக்கள் தொடர்ந்தபோதிலும், உத்தி யோகபூர்வமாக 1953 ஆம் ஆண்டில்தான் அமெரிக்காவில் வர்ணத் தொலைக்காட்சி அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி, முதலாவது வர்ணத் தொலைக்காட்சி ஒளிபரப்பு 1954 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது. இருந்தபோதிலும், வர்ணத் தொலைக்காட்சிகள் உடனடியாக சந்தைப்படுத்தப்படாத நிலையில் கிட்டத்தட்ட பத்து வருட காலம் அளவில் கறுப்பு வெள்ளை தொலைக்காட்சிப் பெட்டிகளே சந்தைப்படுத்தப்பட்டன.

இருப்பினும், நாளடைவில் 1965 ஆம் ஆண்டளவில் வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் பரவலாக விற்பனையிடப்பட்டதுடன், வர்ண ஒளிபரப்பும் ஆரம்பமாகியது.

(தொடரும்)






ஆரம்ப கால தொலைக்காட்சி என்டனாவும் கேபிள் வயரும்

(இலங்கையில் தொலைக்காட்சி அறிமுகம் அடுத்த வாரம்)

-ரிஷபன்

## உலகில் பிரபல்யமானவர்கள்



### வில்லியம் ஷெவெங்க் கில்பேர்ட்

சேர்.வில்லியம் ஷெவெங்க் கில்பேர்ட் 1836 ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம் 18 ஆம் திகதி பிறந்தார். இவர் ஆங்கிலேய நாடகக் கலைஞர், கவிஞர், இசை நாடக அமைப்பாளர் மற்றும் 'கோட்டோவியர்' ஆகிய துறைகளில் சாதனை படைத்தார். இவர் சேர் ஆர்தர் சல்லிவனுடன் இணைந்து உருவாக்கிய 14 கோட்டோவியர்கள் ஒப்பராக்களால் [நாடகக் குழுக்கள்] பரவலாக அறியப்பட்டவையாகும். இவற்றில் 'எச்.எம்.எஸ். பினாஃபோர்', 'த பைரேட்ஸ் ஆஃப் பென்சான்ஸ்', 'த.மிகாடோ' ஆகியன உலகில் மிகவும் புகழ்பெற்றவையாகும்.

'த மிகாடோ' இசை நாடக வரலாற்றிலேயே, அடிக்கடி நிகழ்த்தப்பட்ட நாடகமாகும் மற்றும் இவரின் படைப்புக்களை உலகில் இருந்த ஏனைய ஒப்பரா நாடகக் குழுக்கள், பாடசாலைகள், சமூக நாடகக்குழுக்களால் இன்றும் அரங்கேற்றப்படுகின்றன. அது மட்டுமன்றி, இவற்றின் வரிகள் ஆங்கில மொழி இலக்கிய பாடங்களில் பாடங்களாக உள்ளமை இவரின் கவிப்புலமைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

மேலும் கில்பேர்ட் 'பாப் பாலர்ட்ஸ்' எனப்பட்ட இலகு கவிதைகளை நகைச்சுவை ஓவியங்களுடன் எழுதினார். 75 நாடகங்களையும் ஒப்பரா [நாடக] வசனங்களையும் சிறு கதைகளையும் கவிதைகளையும் எழுதி மக்களை மகிழ்வித்த பெருமை வில்லியம் ஷெவெங்க் கில்பேர்ட்டையே சாரும். இவரது நாடகங்களும் யதார்த்தமான மேடை இயக்கமும் ஒஸ்கார் வைல்ட், ஜோர்ஜ் பெர்னாட் ஷா உள்ளிட்ட பிற நாடகக் கலைஞர்களுக்கு தூண்டுதலாக அமைந்தது.


இவரது பாடல் வரிகளும் சந்தையாளுமையும் காமிக் ஒப்பராக்களின் கவிதை தரத்தை முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு உயர்த்தியதாக கேம்பிரிட்ஜ்ஜின் ஆங்கில அமெரிக்க இலக்கிய வரலாறு கூறுகிறது. நாடக இலக்கியத்திற்கும் ஆங்கில இலக்கியத்திற்கும் பெரிதும் சேவையாற்றிய இவர் 1911 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி இவ்வுலகை விட்டு நீங்கினார்.

தொகுப்பு: ஜுனைட் எம்.பஹ்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் சூழலியல் பல்கலைக்கழகம்

# தேசிய நாமல் பூங்கா



**வரலாற்று புகழ்மிக்க தம்புள்ளை நகரில் இருந்து பதினைந்து கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள பாரிய வனத்தொகுதியே தேசிய நாமல் பூங்காவாகும். இரண்டாயிரம் ஏக்கர் பரப்பளவைக் கொண்ட இந்த நிலப்பரப்பில் ஏறக்குறைய அரைவாசிப் பிரதேசம் முழுவதும் இந்த வனப்பூங்கா பரவிக் கிடக்கின்றமை குறிப்பிடத்தக்கது.**

இவ்வனத்தின் 260 ஏக்கர் நிலப்பரப்பு முழுவதும் நாக மரங்கள் நிறைந்து காணப்படுகின்றது. இவ்வனப்பகுதியின் 600 ஏக்கர் அளவு நிலப்பரப்பு பூங்கா 'இளஞ்சிவப்பு ஸ்படிகம்'என அழைக்கப்படும் கூழாங்கற்களால் ஆன தொடர்களாக காணப்படுகின்றன. இந்த வனப்பகுதியை இலங்கையின் மூன்றாவது வனப்புகலிடம் என 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி அதிவிசேட வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டது.

இங்கு மிக முக்கியமான தாவரமாக நாக மரங்களே திகழ்கின்றன. இவை சுமார் 750 வருடங்களிலும் பழமையானதாகும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நாக மரங்களுக்கிடையே இனங்காணப்பட்ட 72 வகையான மருத்துவத் தாவரங்களையும் அத்தோடு, இனங்காணப்பட்ட 18 பறவையினங்களையும் புலி, கரடி தவிர்ந்த யானை முதல் ஏனைய விலங்குகளையும் காணக் கூடியதாக உள்ளது.









## ஆரம்ப அநுராதபுர யுகம்

கி.மு. 02 ஆம் நூற்றாண்டில் அநுராதபுர யுகத்தின் ஆரம்ப காலத்தில் ஆட்சி செய்த தேவநம்பிய தீசனால் அமைக்கப்பட்ட பௌத்த வழிபாட்டுத்தலம் ஒன்று இங்கு இருந்ததாகவும் இதனை எட்டாம் நூற்றாண்டில் நான்காம் தம்புலன் அரசனின் ஆட்சிவரை பல்வேறு மன்னர்களின் ஆதரவுடன் நன்கு பராமரிக்கப்பட்டதாகவும் வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. அக்காலத்தில் 'நா முக்கலான' என்ற பெயரில் அழைக்கப்பட்ட இந்த வனத்தொகுதியை தேசிய வனமாக அறிவித்த பெருமை 1991 இல் இங்கு வருகை தந்த ராஹுல் தேரரையே சாரும்.

இது அமைந்துள்ள பகுதி கடல் மட்டத்தில் இருந்து 180 முதல் 300 மீற்றர் உயரத்தில் அமைந்துள்ளது. இப்பிரதேசத்தில் மலைச்சரிவுகளையும் பள்ளத்தாக்குகளையும் காணலாம்.








## ப்ராக் வரலாற்று யுகம்

இந்த இளஞ்சிவப்பு கூழாங்கல் மலையானது, இற்றைக்கு பத்து லட்சத்து 550 மில்லியன் வருடங்களுக்கு முற்பட்ட ப்ராக் வரலாற்று யுகத்திற்குரியது என புவிச்சரிதவியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளார்கள். அநுராதபுரம் மாவட்டத்தினூடாக செல்லும் ஏ-9 பாதையில் அமைந்துள்ள 'மடாட்டுகம' சந்தியில் இருந்து இடதுபக்கமாகத் திரும்பி ஏழு கிலோ மீற்றர் பயணித்தால் தேசிய நாமல் பூங்காவை கண்டு களிக்க முடியும். (-அ)








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் மிக நீளமான புகையிரத சுரங்கம்



உலகின் மிக நீளமான புகையிரத சுரங்கப்பாதையை ஐரோப்பாவிலுள்ள சுவிட்ஸர்லாந்தின் 'அல்ப்ஸ்' மலைக்கு கீழ் அமைக்கப்பட்டு, கடந்த ஜூன் மாதம் முதலாம் திகதி திறந்து வைக்கப்பட்டது. இந்த சுரங்கப்பாதை 'Gotthardo' என அழைக்கப்படுவதுடன் இதன் நீளம் 57 கிலோ மீற்றராக உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இந்தச் சுரங்கப்பாதை சுவிட்ஸர்லாந்தின் எர்ஸ்ட்ஃபேல்ட் நகரில் இருந்து போடியோ நகரம் வரை நீள்கின்றது.








## 17 வருடங்களாக

இந்த சுரங்கத்தை அமைக்க 17 வருட காலங்கள் செலவிடப்பட்டன. இதனை அமைக்க 12 பில்லியன் அமெரிக்கன் டொலர் பணம் செலவிடப்பட்டுள்ளது. பொறியியலாளர்கள் மற்றும் கட்டடப் பணியாளர்கள் என 125 பேர் வீதம் மூன்று குழுக்களாக ஒன்றன்பின் ஒன்றாக 43,800 மணித்தியாலங்களாக தொடர்ச்சியாக இந்த சுரங்கத்தை அமைத்தனர்.

## திறப்பு விழா

இச்சுரங்கப்பாதை சுவிட்ஸர்லாந்து சமஷ்டி ஜனாதிபதி ஜொஹென் ஷனைடர் அமான் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அந்நாட்டின் புகையிரத திணைக்களத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியாகிய அன்டர்ஸ் மேயர், பொருளாதார நடவடிக்கைக்கான அமைச்சர் டொரிஸ் லியுதாட் ஆகியோர் இந்த வைபவத்தில் கலந்துகொண்டனர்.

## திறப்பு விழாவில் கலந்துகொண்ட விருந்தினர்

இத் திறப்பு விழா பொலெஜியோ நகரில் நடைபெற்றது. இதன்போது ஜெர்மன் சான்சலோர் அஞ்ஜெலா மாக்கெல் அம்மையார், பிரான்சிய ஜனாதிபதி ஃப்ரென்சுவா ஓலன்ட் மற்றும் இத்தாலிய பிரதமர் மெட்டியோ ரென்சி ஆகியோர் கலந்துகொண்டனர்.

## உத்தியோகபூர்வ பயணம் டிசம்பரில்


இச்சுரங்கம் ஜூன் மாதம் திறக்கப்பட்ட போதும் எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் இருந்தே புகையிரதப் பயணத்திற்காக உத்தியோகபூர்வமாக திறக்கப்படும்.



புகையிரத சுரங்கத்தின் ஊடாக, சுவிட்ஸர்லாந்தின் சூரிச் நகரில் இருந்து வட இத்தாலி வரை இரண்டு மணித்தியாலம் 40 நிமிடத்தில் பயணிக்க முடியும் என சுவிட்சர்லாந்து புகையிரத திணைக்களம் தெரிவித்துள்ளது.

## சுரங்கத்தை அமைத்த விதம்

இந்த சுரங்கத்தை அமைக்கப் பயன்படுத்திய அகழ்வு உபகரணங்களும் இயந்திரங்களும் அதி நவீன தொழில்நுட்பம் நிறைந்தவை. விபத்துக்கள் நிகழக்கூடிய ஆபத்தான வெடிபொருட்கள் எதுவும் சுரங்க அகழ்வின்போது பயன்படுத்தப்பட வில்லை என்பது ஒரு விசேட அம்சமாகும். இதேவேளை, சுரங்க அகழ்வுகள் இரு முனைகளிலிருந்து ஆரம்பிக்கப்பட்டமையால், நேர சிக்கனமும் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தியமையால் குறைந்த செலவில் சுரங்கத்தை அமைக்கக்கூடியதாகவும் இருந்தது என சுவிட்சர்லாந்து அரசு கூறுகிறது. (-அ)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்ப்பல்வ

# BIODIVERS

## பாதுகாத்





உலகின் இருப்புக்கு அத்தியாவசியமான ஓர் அம்சமாக உயிர்ப்பல்வகை
காணப்படுகின்ற மில்லியன் கணக்கான உயிரினங்களையும் தாவரங்களையும்
அமைந்துள்ளது. இதனடிப்படையிலேயே, உயிர்ப்பல்வகைமையினைப் பாது
கின்றது. இந்த விடயம் குறித்து உலக மக்களை விழிப்புணர்வூட்டும் வ
தலைமையில் 1992 ஆம் ஆண்டு 'உயிர்ப்பல்வகைமை உடன்
பட்டது. இதன்கீழ் உலகம் முழுவதும் இதுவரை 12 நாடுகளில்
டுள்ளன. இந்த ஆண்டுக்கான மாநாடு டிசம்பர் மாதம் மெக்
வுள்ளது. மேலும், 2011 - 2020 வரையிலான பத்தா
'உயிர்ப்பல்வகைமை தசாப்தம்' என்று பெயரிடப்ப

## உயிர்ப்பல்வகைமை உடன்படிக்கை

### Convention on Biological Diversity

1992 ஆம் ஆண்டு பிரேசிலின் ரியோ டி ஜெனைரோ நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் புவி மாநாட்டில் கலந்துகொண்ட அதன் அங்கத்துவ நாடுகளுக்குரிய தலைவர்களின் தலைமையில் 'சுற்றாடலைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம்' என்பதை வலியுறுத்தும் வகையில் 'உயிர்ப்பல்வகைமை உடன்படிக்கை [சாசனம்]' கைச்சாத்திடப்பட்டது.



இதன்போது, அரச தலைவர்களுடன், உள்நாட்டு மக்கள் குழுக்கள், அரச சார்பற்ற அமைப்புகள் உட்பட, பல்வேறு தரப்பினரும் பங்குபற்றியிருந்தனர். இதன்படி, இந்த உடன்படிக்கையினூடாக பிரதான மூன்று இலக்குகள் குறித்து கவனம் செலுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

01 உயிர்ப்பல்வகைமையினை எதிர்கால சந்ததிகளுக்காகப் பாதுகாத்தல்

02 உயிர்ப்பல்வகைமைக்குப் பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் அதனைப் பயன்படுத்த முயற்சித்தல்

03 மரபியற் பல்வகைமையூடாகக் கிடைக்கும் நலன்கள் சமமாகப் பிரிந்து செல்வதனை உறுதிப்படுத்தல்




இந்த மாநாட்டில் மூன்று உடன்படிக்கைகள் வெளியிடப்பட்டன.

- உயிர்ப் பல்வகைமை உடன்படிக்கை (CBD - Convention on Biological Diversity)
- காலநிலை மாற்றம் குறித்த ஐக்கிய நாடுகளின் நிகழ்ச்சித் திட்டம் (UNFCC - UN Frame work Convention on Climate Change)
- பாலைவன மாக்கலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் உடன்படிக்கை (UNCCD - United Nations Convention to Combat Desertification)





## இதுவரைக்குமான உலகின் கவனம்

1992 ஆம் ஆண்டு ரியோ டி ஜெனைரோ நகரில் நடைபெற்ற புவி மாநாட்டில் ஏற்படுத்தப்பட்ட மூன்று உடன்படிக்கைகளின்படி, இதுவரையில் பிரதான சுற்றாடல் இணக்கப்பாடுகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளன.

1972 இல் சுற்றாடல் பிரச்சினைகள் குறித்த உலகின் முதலாவது சர்வதேச மாநாடு : ஸ்டொக்ஹொம் நகரில் இடம்பெற்ற மானிட சுற்றாடல் பற்றிய ஐக்கிய நாடுகளின் மாநாடு.

1987 இல் ஓசோன் படலத்தினைப் பாதுகாப்பது பற்றி விழிப்புணர்வூட்டும் மொன்ட்ரியல் நெறிமுறை (Montreal Protocol) முன்வைக்கப்பட்டது.

உயிர்ப்பல்வகைமை உடன்படிக்கை 1992

(UNFCC - UN Frame work Convention on Climate Change)

1992 இல் விசேட இலக்குகள் அற்ற பொது காலநிலை உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

1997 இல் தொழிற்சாலை அபிவிருத்தி நாடுகளிலிருந்து பச்சைவீட்டு வாயுக்களின் வெளியேற்றத்தினைக் குறைக்கும் வகையில் கியோட்டோ நெறிமுறை கொண்டுவரப்பட்டது.

2005 இல் ஐக்கிய அமெரிக்கா இல்லாத நிலையில், கியோட்டோ நெறிமுறை அமுலுக்கு வந்தது.

2009 இல் சீனா மற்றும் இந்தியா உட்பட, அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் பச்சைவீட்டு வாயு வெளியேற்றத்தினைக் குறைப்பதற்கு இணங்கின.

2011 புதிய காலநிலை உடன்படிக்கை தொடர்பில், 2015 இல் முயற்சிப்பதாக UNFCCயுடன் தொடர்புடைய குழுக்கள் தென்னாபிரிக்காவில் இணக்கம் தெரிவித்தன.

(CBD - Convention on Biological Diversity)

1992 இல் உயிர்ப்பல்வகைமைப் பாதுகாப்பு தொடர்பிலான உடன்படிக்கைக்கு இணக்கம் காணப்பட்டது.

2000 இல் மரபணு மாற்றத்திற்குட்படுத்தப்பட்ட உயிரிகள் பற்றி உயிர் பாதுகாப்பு விதிகள் உள்ளடங்கிய கார்ட்டாஜெனா நெறிமுறை முன்வைக்கப்பட்டது.

2002 இல் உயிர்ப்பல்வகைமை உடன்படிக்கையில் இணைந்து கொண்ட குழுக்கள், 2010 இல் உயிர்ப்பல்வகைமை குறைதலைத் தடுப்பதற்கு இணங்கியுள்ளன.

2010 இல் உயிர்ப்பல்வகைமைக்கு ஏற்பட்ட ஆபத்தினைக் குறைப்பதற்காக 'Aichi இலக்கு' நிறுவப்பட்டது.

2012 இல் உயிர்ப்பல்வகைமை மற்றும் சுற்றாடல் தொகுதி சேவைகள் தொடர்பில் சர்வதேச மட்டத்தில் அரங்கம் ஒன்று உருவாக்கப்பட்டது.

(UNCCD - United Nations Convention to Combat Desertification)

1994 இல் நிலப் பாதிப்பினைத் தடுக்கும் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது.

2009 இல் நிலப் பாதிப்பினைத் தடுக்கும் இலக்குகளுடன் தொடர்புடைய 11 விடயங்கள் தொடர்பில் நாடுகள் இணக்கம் தெரிவித்தன.

2009 இல் நிலப் பாதிப்பினைப் பாதுகாக்கும் இலக்குகள் தொடர்பிலான அரசாங்க அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.





## குழுக்களு

உயிர்ப்பல்வகைமை
மற்றும் குழுக்களே இ
குழுக்களும் ஒன்றிை
தொடர்பிலான விடய



COP 06
2002 ஏப்ரல்
நெதர்லாந்தின்
கொப்பன்ஹேகன்
32

COP 13
2016 டிசம்பர்
மெக்ஸிகோவின்
கென்குன்
01

COP 08
2006 மார்ச்
பிரேசிலின்
குரிடிபா
34

COP 03
1996
நொவெம்ப
ஆர்ஜன்டின
புவெனஸ் அ



## உயிர்ப்பல்வகைமை உடன்படிக்கை அமுலாகும் விதம்

இந்த உடன்படிக்கையில் உள்ள இலக்குகளை அடையும் முகமாக, உலகம் முழுவதும் 190 நாடுகள் இணக்கத்தினை வெளியிட்டுள்ளன. உயிர்ப்பல்வகைமையின் நன்மைகள் குறித்து ஒவ்வொருவருக்கும் உள்ள அறிவு மற்றும் தொழில்நுட்பத்தினைப் பரிமாறிக்கொள்ளும் சந்தர்ப்பமும் இதனால் கிடைக்கின்றது. எனவே, தனித்தனியாகவும் குழுவாகவும் ஒருவருக்கு ஒருவர் ஒத்துழைப்பு வழங்கி சுற்றாடலைப் பாதுகாத்தல் மற்றும் உயிர்ப்பல்வகைமை வளத்தினைப் பாதுகாத்தல் போன்றவை இங்கு எதிர்பார்க்கப்படுகின்றன.

- இந்த உடன்படிக்கை அலுவலகம் 'செயலகம்' என்று அழைக்கப்படுகின்றது.
- இந்த அலுவலகம் கெனடாவின் மொன்ட்ரியல் நகரில் அமைந்துள்ளது.
- இந்த அலுவலகத்தின் பிரதானி 'நிறைவேற்று செயலாளர்' என்று அழைக்கப்படுகின்றார்.
- ஐக்கிய நாடுகள் சபையின் துணை பொதுச்செயலாளர் பதவியினை வகிப்பவரே, இந்த பதவியினையும் வகிக்கின்றார்.
- இவரின் அலுவலக குழுவாக விஞ்ஞானிகள், பொருளாதார வல்லுனர்கள், சட்டத்தரணிகள், நிர்வாக அதிகாரிகள், உதவியாளர்கள் அடங்குவர்.

## ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச உயிர்ப்பல்வகைமை தினம் மே 22

ஒவ்வொரு ஆண்டும் மே 22 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச உயிர்ப்பல்வகைமை தினமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. பலதரப்பட்ட தொனிப்பொருள்களில் இத்தினம் கொண்டாடப்படுகின்றது.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Dedicated to forest biodiversity | Biodiversity and poverty alleviation - challenges for sustainable development | Biodiversity: Food, Water and Health for All | Biodiversity: Life Insurance for our Changing World | Protect Biodiversity in Drylands | Biodiversity: and Climate Change | Biodiversity: and Agriculture | Invasive Alien Species |
| 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 |
| வனாந்தர உயிர்ப்பல்வகைமைக்காக அர்ப்பணித்தல் | உயிர்ப்பல்வகைமை மற்றும் வறுமையைக் குறைத்தல் | உயிர்ப்பல்வகைமை: அனைவருக்கும் உணவு, நீர், சுகாதாரம் | உயிர்ப்பல்வகைமை: மாறும் உலகத்திற்கு ஆயுள் காப்புறுதி | வறண்ட நிலங்களின் உயிர்ப்பல்வகைமையினைக் காப்போம் | உயிர்ப்பல்வகைமை மற்றும் காலநிலை மாற்றங்கள் | உயிர்ப்பல்வகைமையும் விவசாயமும் | ஆக்கிரமிப்பு உயிரினங்கள் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...கைமை

# ...RSITY

## ...தல்





...மை கருதப்படுகின்றது. இந்த உலகில் ...யும் உள்ளடக்கியதாக உயிர்ப்பல்வகைமை ...பாதுகாப்பது அவசியமானதாகக் கூறப்படு ...வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் ...டன்படிக்கை' கைச்சாத்திடப் ...ில் மாநாடுகள் நடத்தப்பட் ...க்ஸிகோவில் நடைபெற ...தாண்டு காலப்பகுதி ...ப்பட்டுள்ளது.



## ...நக்கு இடையில் மாநாடு

...ம உடன்படிக்கைக்கு ஆதரவு தெரிவித்துள்ள நாடுகள் ... இந்த உடன்படிக்கைக்கு பொறுப்பாக இருக்கின்றன. இந்த நாடுகளும் ...ிணைந்து நடாத்தும் பலதரப்பட்ட மாநாடுகளில் இந்த உடன்படிக்கை ...டயங்கள் கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் எட்டப்படும்.




# 2020 இல் நிறைவேற்றப்படவுள்ள அய்ச்சி இலக்குகள்

ஜப்பானின் அய்ச்சி பிராந்தியத்தில் நடைபெற்ற COP 10 இல் 2011 முதல் 2020 வரையான காலப்பகுதி ஐக்கிய நாடுகள் அமைப்பினால் உயிர்ப்பல்வகைமை தசாப்தமாக பிரகடனம் செய்யப்பட்ட பின்னர், இந்த அய்ச்சி இலக்குகள் முன்வைக்கப்பட்டன. இங்கு A, B, C, D, E ஆகிய 5 உபாயத்திட்டங்களின்கீழ் இலக்குகள் வகுக்கப்பட்டுள்ளன. இவற்றை 2020 இல் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

1. உயிர்ப்பல்வகைமையின் முக்கியத்துவம் பற்றி மக்களுக்கு அறிவுறுத்தல் மற்றும் அதனைப் பாதுகாத்தல்
2. தேசிய மற்றும் பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் உயிர்ப் பல்வகைமை பற்றிய விடயங்களை சேர்த்தல்
3. உயிர்ப்பல்வகைமைக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் விடயங்களை சுற்றாடலிலிருந்து அகற்றல் மற்றும் அவற்றை குறைத்தல்
4. நிலையான உற்பத்திக்காக அரசு மற்றும் இதர பங்காளர்கள் முன்னணி வகித்தல்
5. வனாந்தரம் உள்ளிட்ட, அனைத்து இயற்கை வாச ஸ்தலங்களையும் இழக்கும் விகிதத்தினைக் குறைத்தல்
6. அனைத்து மீனினங்கள் மற்றும் நீர்த்தாவரங்களை சரியான முறையில் முகாமைத்துவப்படுத்தி வளர்த்தல்
7. விவசாயம் மற்றும் நீர் வேளாண்மையில் திடத்தன்மையினைப் பேண நடவடிக்கை எடுத்தல்
8. அனைத்துவிதமான மாசுகளாலும் சுற்றாடலுக்கும் உயிர்ப்பல்வகைமைக்கும் ஏற்படும் பாதிப்பினைக் குறைத்தல்
9. ஆக்கிரமிப்புத் தாவரங்களை இனங்கண்டு முக்கியத்துவத்தின் அடிப்படையில் கட்டுப்படுத்தல்
10. காலநிலை மாற்றங்கள் காரணமாக, பாதிப்படையும் பவளப்பாறைகள் உட்பட, சுற்றாடல் தொகுதிகள் மீது கவனம் செலுத்துதல்
11. உயிர்ப்பல்வகைமைக்காக பெறுமதி மிக்க நன்னீர் மற்றும் உவர்நீர் நீர்நிலைகளை இனங்கண்டு அவற்றை பாதுகாத்தல்
12. அழியும் அபாயத்தில் உள்ள விலங்குகள் மற்றும் தாவரங்களை இனங்கண்டு அவற்றை பாதுகாத்தல்
13. வேளாண்மைக்காக பயன்படுத்தும் மரபணு மாற்றப்பட்ட தாவரங்கள் மற்றும் விலங்குகளின் மரபியற் பல்வகைமையைப் பாதுகாத்தல்
14. அத்தியாவசிய சேவைகளை வழங்கும் சுற்றாடல் தொகுதிகளை மீளமைக்கவும் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுத்தல்
15. பாலைவனமாக்கலுக்கு எதிராகப் போராடி வளிமண்டலத்தில் காபன் அளவினைக் குறைத்தல்
16. நகோயா நெறிமுறையின்படி (Nagoya Protocol) மரபணு வளங்களின் நலன்கள் அனைவருக்கும் சமமாக கிடைப்பதற்கு வழி செய்தல்
17. அனைத்து நாடுகளும் தமது உயிர்ப்பல்வகைமையினைக் பாதுகாப்பதற்கு உபாயங்களையும் திட்டங்களையும் முன்னெடுத்தல்
18. உயிர்ப்பல்வகைமையினைப் பாதுகாப்பதற்குத் தேவையான அறிவினை சேகரித்தல்
19. உயிர்ப்பல்வகைமை மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழில்நுட்பத்தினை பற்றி கவனம் செலுத்தல்
20. இந்த உயிர்ப்பல்வகைமை தசாப்தத்தினை வெற்றிகரமாக்குவதற்குத் தேவையான நிதி வளங்களை வழங்குதல்

## 2011-2020 United Nations Decade on Biodiversity

## உயிர்ப்பல்வகைமை தசாப்தம்

2010 ஆம் ஆண்டு ஜப்பானின் அய்ச்சி பிராந்தியத்தில் நடைபெற்ற COP 10 ஆவது மாநாட்டில் முன்வைக்கப்பட்ட உத்தேச யோசனைகளின் அடிப்படையில், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையினால் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதி உயிர்ப்பல்வகைமை தசாப்தமாக பிரகடனப்படுத்தப்பட்டது. இங்கு பிர[illegible]னமாக உயிர்ப்பல்வகைமையினைப் பாதுகாப்பதற்கான திட்ட வரைபுகளைத் தயாரித்தல், இலக்குகளை அடைவதற்கான ஒத்துழைப்பு மற்றும் அறிவினை வழங்குதல், உயிர்ப்பல்வகைமையினைப் பாதுகாப்பது பற்றி மக்களை அறிவுறுத்தல் மற்றும் கவனத்தினை ஈர்த்தல் என்பன பற்றி கவனம் செலுத்தப்படுகின்றன.




## COP மாநாட்டின்மூலம் நிறுவப்பட்ட நிகழ்ச்சிகளின் தொனிப்பொருள்கள்

01 விவசாயம் மற்றும் உயிர்ப்பல்வகைமை பற்றிய கலந்துரையாடல்
02 உலர் மற்றும் அரை ஈரளிப்பு நிலத்தின் உயிர்ப்பல்வகைமை பற்றிய கலந்துரையாடல்
03 வனாந்தரத்தின் உயிர்ப்பல்வகைமை பற்றிய கலந்துரையாடல்
04 நிலம் மற்றும் நீரின் உயிர்ப்பல்வகைமை பற்றிய கலந்துரையாடல்
05 தீவுகளின் உயிர்ப்பல்வகைமை பற்றிய கலந்துரையாடல்
06 சமுத்திர மற்றும் கரையோர வலயங்களின் உயிர்ப்பல்வகைமை பற்றிய கலந்துரையாடல்
07 மலையகப்பகுதிகளின் உயிர்ப்பல்வகைமை பற்றிய கலந்துரையாடல்



## நகோயா நெறிமுறை

மரபியற் பல்வகைமைமூலம் கிடைக்கும் வளங்களை சாதாரணமான முறையிலும் சமமாகவும் உலகம் முழுவதும் விஸ்தரிப்பதனை நோக்காகக் கொண்டு, 2014 ஆம் ஆண்டு முதல் உயிர்ப்பல்வகைமை உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டது.

## கார்ட்டாஜெனா நெறிமுறை

நவீன தொழில்நுட்பம்மூலம் மரபணு மாற்றத்திற்குட்பட்ட உயிரினங்களை மிகவும் பாதுகாப்பாக நடத்துதல் மற்றும் இடம்பெயர்த்தல் ஆகிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு உயிர்ப்பாதுகாப்பின்கீழ் இந்த நெறிமுறை 2000 ஆம் ஆண்டு உயிர்ப்பல்வகைமை உடன்படிக்கையில் இணைக்கப்பட்டது. 2003 ஆம் ஆண்டு முதல் இது அமுலாகியது.



Biodiversity: Development and Poverty Alleviation
2010
உயிர்ப்பல்வகைமை : அபிவிருத்தி மற்றும் வறுமை ஒழிப்பு

Forest Biodiversity
2011
வனாந்தர உயிர்ப்பல்வகைமை

Marine Biodiversity
2012
சமுத்திர உயிர்ப்பல்வகைமை

Water and Biodiversity
2013
நீரும் உயிர்ப்பல்வகைமையும்

Island Biodiversity
2014
தீவுகளின் உயிர்ப்பல்வகைமை

Biodiversity for Sustainable Development
2015
நிலையான அபிவிருத்திக்கான உயிர்ப்பல்வகைமை

Mainstreaming Biodiversity; Sustaining People and their Livelihoods
2016
உயிர்ப்பல்வகைமை முக்கியத்துவம்; மக்களையும் அவர்களின் வாழ்வாதாரத்தையும் தக்கவைத்தல்

-பிரியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# டீ-ரெக்ஸ் டைனோசர் பற்றிய புதிய தகவல்கள் வெளியாகின...!



மிகவும் கொடூரமான டைனோசராகவே 'டீ-ரெக்ஸ்' *(Tyrannosaurus rex)* டைனோசர் கருதப்படுகின்றது. இதற்குக் காரணம், மற்றைய டைனோசர்களைவிட, இந்த டைனோசரின் புதைபடிம சான்றுகள் அதிகளவில் கிடைத்துள்ளமை ஆகும். ஜுராசிக் பார்க் திரைப்படத்தில் மட்டுமன்றி, ஜுராசிக் வேர்ல்ட் திரைப்படத்திலும் முக்கியமான டைனோசராக இந்த டீ-ரெக்ஸ் டைனோசர் சித்திரிக்கப்பட்டிருந்தது. படிமவியல் விஞ்ஞானிகளின் கருத்தின்படி, இந்த டைனோசர்களின் மூக்கு கூர்மையானது. மோப்பசக்தி மிக்கது. கூர்மையான கோரைப்பற்களைக் கொண்டிருந்த இவை, விலங்குகளைத் துரத்திச் சென்று தாக்கி இரையாக்கிக்கொண்டன. இவ்வாறு டீ-ரெக்ஸ் டைனோசர்கள் பற்றிய பல்வேறு தகவல்கள் கூறப்பட்டுள்ளபோதும், அண்மையில் அவை குறித்து மேலும் சில புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

## புதிய கண்டுபிடிப்பு

இந்த புதிய தகவல்களின் படி, கூரிய கோரைப் பற்களைக் கொண்டுள்ள டீ-ரெக்ஸ் டைனோசர் இனமானது, கொடூரமான விலங்கினமன்று எனவும் தெரியவந்துள்ளது. மேலும், அதற்கு உதடுகள் இருந்துள்ளதுடன், அதன் பற்கள் வெளியே தெரியும் விதத்தில் அமைந்திருக்கவில்லை என்றும் கண்டறியப்பட்டுள்ளது. இத்தகவல்களை கெனடாவின் டொரன்டோ பல்கலைக் கழகத்தின் படிமவியல் பேராசிரியர் ரொபட் ரெயிஸ் தெரிவித்துள்ளார். டீ-ரெக்ஸ் டைனோசர்களின் எலும்பு மாதிரிகளை நீண்டகாலம் ஆய்வு செய்ததை அடுத்தே, அவர் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளார்.



## டீ-ரெக்ஸ்

டைனோசரஸ் குடும்பத்தின் மிகப் பெரிய உறுப்பினராக டீ-ரெக்ஸ் டைனோசர் இனம் கருதப்படுகின்றது. இவ்வினத்திற்குரிய டைனோசர் ஒன்று 4.6 - 6.2 மீற்றர் வரையான உயரத்தைக் கொண்டிருக்கும். எடை 9 தொன் ஆகும். அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களில் மேற்கொண்ட அகழ்வாராய்ச்சிகளின்போது, டீ-ரெக்ஸ் டைனோசர்களின் புதைபடிமங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றின் ஆயுட் காலம் 30 ஆண்டுகள் மட்டுமே ஆகும். இதன் உடல் எடையை சமநிலைப்படுத்திக் கொள்ள இதன் ராட்சத வால் பயன்பட்டது.

## உடற்பலம் மிக்க டைனோசர்

டீ-ரெக்ஸ் டைனோசர்களின் பற்கள் மிகவும் கூர்மையானவை. தாம் இரையாக்கிக் கொள்ளும் இதர இனங்களுக்குரிய டைனோசர்களையும் நன்கு கடித்துக் குதறுவதற்கு ஏற்றவாறு டீ-ரெக்ஸ் டைனோசர்களின் எலும்புகள் அமைந்துள்ளன. மண்டையோடு மற்றும் கழுத்துப் பகுதி எலும்புகளின் அடிப்படையில் பார்க்கும்போது, மற்றைய ஊனுண்ணி, டைனோசர்களைவிட, டீ-ரெக்ஸின் கழுத்துப்பகுதி தசைகள் பலமாகக் காணப்பட்டதாக விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். பலமான கழுத்தின் உதவியுடன் இரையாக்கிக்கொள்ளும் விலங்குகளின் தசையை கிழித்துக் கடித்துக் குதறுவதற்கு டீ-ரெக்ஸ் டைனோசர்களால் முடிந்துள்ளது. இவை 67 - 66 மில்லியன் வருடங்களுக்கு இடைப்பட்ட காலப் பகுதிகளில் புவியின் சதுப்பு நிலங்கள் கொண்ட வனாந்தரப்பகுதிகளில் வாழ்ந்துள்ளன.

பறவைகளுக்கு இருப்பது போன்றே, டீ-ரெக்ஸின் உடலிலும் சிறகுகள் இருந்ததாக புதிய தகவல்கள் தெரிவிக்கின்றன. சிறிய கூர்மையான நகங்கள் கொண்ட முன்னங்கால்களும் இருந்துள்ளன.





(-பீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்ய குடும்பத்துடன் வாழும் மிகப் பெரிய கரடி



ரஷ்யாவைச் சேர்ந்த ஸ்வெட்லனா மற்றும் யூரி பெண்டெலீன்கோ தம்பதியினர், தமது வீட்டில் கரடியொன்றை வளர்த்து வருகின்றனர். மிகுந்த பாசத்துடன் வளர்த்து வரும் இந்தக் கரடிக்கு 'ஸ்டீஃபன்' என்று பெயரிட்டுள்ளனர். ஸ்டீஃபன், மூன்று மாதக் குட்டியாக இருக்கும் போதுதான் ஸ்வெட்லனா - யூரி தம்பதியினர் அதனை தத்தெடுத்துள்ளனர். அன்றிலிருந்து அவர்களின் வீட்டின் ஓர் அங்கத்தவராக ஸ்டீஃபன் மாறிவிட்டது.





தற்போது ஸ்டீஃபனுக்கு வயது 23. அது 7 அடி உயரமும் 136 கிலோ கிராம் எடையும் கொண்ட மிகப் பெரிய கரடியாக வளர்ந்துவிட்டது. ஸ்வெட்லனா, யுரியுடன் இணைந்து ஸ்டீஃபன் பந்து விளையாடுகின்றது. வீட்டுத் தோட்டத்தில் வேலை செய்கின்றது. சோஃபாவில் அமர்ந்து தொலைக்காட்சி பார்க்கின்றது. ஸ்வெட்லனா - யூரியுடன் கொஞ்சி விளையாடுகின்றது. இவர்களைக் கட்டிப்பிடித்தவாறு நித்திரை செய்கின்றது. மேசையில் ஒன்றாய் அமர்ந்து உணவு உட்கொள்கின்றது. தேநீர் அருந்துகின்றது.

இவை தவிர, புத்தகங்கள் பார்க்கவும் கதைகளை செவிமடுக்கவும் தொலைக்காட்சி பார்க்கவும் ஸ்டீஃபன் மிகவும் ஆர்வம் காட்டுவதாக யூரி தெரிவித்துள்ளார். 25 கிலோ மீன், காய்கறிகள், முட்டைகள் என்பன ஸ்டீஃபனின் ஒரு நாளைக்குரிய உணவுகளாகும். அத்துடன், தமது வீட்டுக்கு வரும் விருந்தாளிகளுடன் ஸ்டீஃபன் மிகவும் அன்பாகவும் நாகரிகமாகவும் நடந்துகொள்வதாகவும், ஸ்டீஃபன் இதுவரை யாருக்கும் சிறியதொரு தீங்கேனும் செய்ததில்லை எனவும் யூரி மேலும் தெரிவித்துள்ளார்.

உங்கள் அபிமான
தமிழ்Mirror
திங்கள் முதல் வெள்ளிவரை
விலை Rs. 10/=
தினசரி தேசிய பத்திரிகையாக வெளிவருகிறது
wijeyanewspapers helping shape opinions
the SUNDAY TIMES
விஜய்
DailyMirror
தமிழ்Mirror www.tamilmirror.lk
விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ආයුබෝවන்
ஆயுபோவன்
வணக்கம்

இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் மகளுக்கும் இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.

දුව: අම්මේ! ලබන මාසයේ අපේ පාසලේ තෑගි බෙදා දීමේ උත්සවය පැවැත්වෙනවා.
அம்மே! லபன மாசயே அப்பே பாசலே தேகி பெதா தீமே உத்சவய பெவெத்வெனவா.
**மகள்: அம்மா! அடுத்த மாதம் எமது பாடசாலையில் பரிசளிப்பு விழா நடைபெறுகிறது.**

අම්මා: ලබන මාසේ කවදා ද?
லபன மாசே கவதா த?
**அம்மா: அடுத்த மாதம் எப்போது?**

දුව: ලබන මාසේ පහළොස් වෙනිදා.
லபன மாசே பஹளொஸ் வெனிதா.
**மகள்: வருகிற மாதம் பதினைந்தாம் திகதி.**

අම්මා: ඔයාටත් තෑගි තියෙනවාද?
ஒயாட்டத் தேகி தியெனவாத?
**அம்மா: உங்களுக்கும் பரிசு இருக்கிறதா?**

දුව: ඔව් අම්මේ. මටත් තෑගි තියෙනවා.
ஒவ் அம்மே. மட்டத் தேகி தியெனவா.
**மகள்: ஆம் அம்மா. எனக்கும் பரிசு இருக்கிறது.**

අම්මා: ඔයාට මොනවට ද තෑගි තියෙන්නේ?
ஒயாட்ட மொனவட்ட த தேகி தியென்னே?
**அம்மா: உங்களுக்கு எதற்கு பரிசு இருக்கிறது?**

දුව: මට විද්‍යාවටයි සිංහලවලටයි තෑගි තියෙනවා.
மட்ட வித்யாவட்டய் சிங்ஹலவலட்டய் தேகி தியெனவா.
**மகள்: எனக்கு விஞ்ஞானத்திற்கும் சிங்களத்திற்கும் பரிசுகள் இருக்கின்றன.**

අම්මා: ඇත්තද? හොඳ දුව. වෙන කාටද තෑගි තියෙන්නේ?
எத்தத? ஹொந்த துவ. வென காட்டத தேகி தியென்னே?
**அம்மா: உண்மையா? நல்ல மகள். வேறு யாருக்கு பரிசு இருக்கிறது?**

දුව: කමලාට ඉංග්‍රීසිවලට තෑගි තියෙනවා. අම්මේ! මට අලුත් සුදු ගවුමක් මහල දෙන්න.
**கமலாட்ட இங்க்ரீசிவலட்ட தேகி தியெனவா. அம்மே! மட்ட அலுத் சுது கவுமக் மஹல தென்ன.**

மகள்: கமலாவுக்கு ஆங்கிலத்திற்கு பரிசு இருக்கிறது. அம்மா! எனக்கு ஒரு புதிய வெள்ளைச் சட்டை தைத்துத் தாருங்கள்.

අම්මා: හොඳයි දුව. මහල දෙන්නම්.
ஹொந்தய் துவ. மஹல தென்னம்.
**அம்மா: நல்லது மகள். தைத்துத் தருகிறேன்.**

**பயிற்சி**

**இடைவெளிகளை நிரப்புக.**

1. ඔයාටත් ........... තියෙනවාද?
2. මටත් තෑගි ......................
3. සුදු ............... මහල දෙන්න.




## தன் கூற்று வாக்கியம் - பிறர் கூற்று வாக்கியம்
## Direct speech & Indirect speech

★ தன் கூற்று மற்றும் பிறர் கூற்று வாக்கியங்களின் 'எதிர்மறை' நிலையில் உள்ள வாக்கியங்கள் பற்றி மேலும் இங்கே பயில்வோம்.

அ) The Principal said to Suthan, "Don't disturb the class".
அதிபர் சுதனிடம் கூறினார், "வகுப்பைக் குழப்பாதே" என்று.
(தன் கூற்று வாக்கியம்-Direct speech)

ஆ) The Principal told Suthan not to disturb the class.
அதிபர் சுதனை வகுப்பைக் குழப்ப வேண்டாமெனக் கூறினார்.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect speech)

★ "Don't disturb the class" - Direct speech (Negative)
"வகுப்பைக் குழப்பாதே" - தன் கூற்று (எதிர்மறை)

★ not to disturb the class - Indirect speech (Negative)
வகுப்பைக் குழப்ப வேண்டாமென - பிறர் கூற்று (எதிர்மறை)

★—★—★—★

இ) The doctor said to the patient, "Don't cry".
மருத்துவர் நோயாளியிடம் கூறினார், "அழாதே" என்று.
(தன் கூற்று வாக்கியம்-Direct speech)

ஈ) The doctor told the patient not to cry.
மருத்துவர் நோயாளியை அழ வேண்டாமெனக் கூறினார்.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect speech)

★ "Don't cry" - Direct speech (Negative)
"அழாதே" - தன் கூற்று (எதிர்மறை)

★ not to cry - Indirect speech (Negative)
அழ வேண்டாமென - பிறர் கூற்று (எதிர்மறை)

★—★—★—★

உ) The teacher said to Raju, "Don't make a noice".
ஆசிரியர் ராஜுவிடம் கூறினார், "சத்தம் போடாதே" என்று.
(தன் கூற்று வாக்கியம்-Direct speech)

ஊ) The teacher told Raju not to make a noice.
ஆசிரியர் ராஜுவை சத்தம் போட வேண்டாமெனக் கூறினார்.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect speech)

★ "Don't make a noice" - Direct speech (Negative)
"சத்தம் போடாதே" - தன் கூற்று (எதிர்மறை)

★ not to make a noice - Indirect speech (Negative)
சத்தம் போட வேண்டாமென - பிறர் கூற்று (எதிர்மறை)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஒலிம்பிக் வாய்ப்பு ரஷ்யாவிற்கு கிடைக்குமா?

அண்மைக் காலங்களில் தடகள போட்டிகளில் ரஷ்யா பற்றிய பேச்சே அதிகம் பேசப்பட்டு வந்தது. அதாவது, ரஷ்ய போட்டியாளர்கள் தடை செய்யபட்ட ஊக்கமருந்துகளை பயன்படுத்தியமையால் அந்நாட்டிற்கு சர்வதேச ஒலிம்பிக் சங்கம் இடைக் காலத் தடையை விதித்திருந்தது.



மேற்படி குற்றச்சாட்டு தொடர்பில் ரஷ்யா உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளா விட்டால் பிரேஸிலில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளில்கூட கலந்து கொள்ளக்கூடிய வாய்ப்பை ரஷ்யா இழக்கக்கூடிய நிலைமை தோன்றியிருந்தது.

இருப்பினும், இது குறித்து ரஷ்யா தரப்பில் வரவேற்கக்கூடிய வகையில் சாதகமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக ஒலிம்பிக் சங்கம் தற்போது தெரிவித்துள்ளது. இது ரஷ்யாவிற்கு சாதகமான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதையே உணர்த்துவதாக கருதப்படுகின்றது.

# தேசிய விளையாட்டுக்கள் வட மாகாணத்தில்



இம்முறை இலங்கையின் 42 ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகள் வட மாகாணத்தில் நடத்தப்படுவது குறித்து வட மாகாண ஆளுநர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் ஆகியோர் தலைமையில் கலந்துரையாடல்கள் நடைபெற்றுள்ளன. இதற்கமைய, தேசிய விளையாட்டுப் போட்டிகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய நகரங்களை மையப்படுத்தி நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

கூடைப்பந்து, கடற்கரைப் பந்து, கடற்கரை கபடி, கால்பந்து, கெரம், செஸ் ஆகிய விளையாட்டுக்கள் யாழ்ப்பாணத்திலும்; நீச்சல், தடகளப் போட்டிகள் கிளிநொச்சியிலும் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெக்கமின் மகனுக்கு டென்னிஸில் ஆர்வமாம்



எந்தவொரு துறையை எடுத்தாலும் அநேகமாக தந்தையின் வழியிலேயே பிள்ளைகளும் ஈடுபடுவர் என்ற கருத்தே சமுதாயத்தில் நிலவி வருகின்றது. ஆனால், உலகப் புகழ் கால்பந்தாட்ட வீரர் டேவிட் பெக்கமின் இரண்டாவது மகன் தந்தைக்கு நேர்மாறான விளையாட்டை தேர்வுசெய்துள்ளார். அதாவது, அவருக்கு டென்னிஸ் விளையாட்டின் மீதே அதிக ஆர்வம் ஏற்பட்டுள்ளது. அண்மையில் உலகப் புகழ் இங்கிலாந்தின் டென்னிஸ் வீரர் என்டி மரேயுடன் பெக்கமின் இரண்டாவது புதல்வர் டென்னிஸ் விளையாடும் புகைப்படங்கள் வெளியாகி பெரிதும் பேசப்படும் விடயமாக அமைந்துவிட்டது.

எனினும், பெக்கமின் மூத்த புதல்வன் தந்தையின் வழியில் கால்பந்தாட்ட போட்டிகளிலேயே ஈடுபாடு காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கோல்ஃப் கிண்ணம் கனடா வீராங்கனைக்கு

கனடாவைச் சேர்ந்த 18 வயதேயான புரூக் என்டர்சன் என்பவர் கனடா சார்பாக, சர்வதேச கொல்ஃப் கிண்ணத்தை வெற்றியீட்டிய வயதில் குறைந்த முதல் பெண் என்ற பெருமையை பெற்றுள்ளார். சில தினங்களுக்கு முன்னர் அமெரிக்காவின் வொஷிங்டன் நகரில் நடைபெற்ற மகளிர்க்கான PGA Championship போட்டித் தொடரை வெற்றி கொண்டதன் மூலமே, புரூக் இந்த பெருமையைப் பெற்றுள்ளார். இந்தப் போட்டித் தொடரை வென்றமையால் புரூக்குக்கு 3.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பரிசாக கிடைக்கப்பெற்றது. எதிர்வரும் ஜூலை 7 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள 'யுஎஸ்' பகிரங்க கொல்ஃப் போட்டியிலும் புரூக் கலந்துகொள்ளவுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஹம்மட் அலி (1942-2016)

உலகின் மிகவும் சிறந்த குத்துச்சண்டை வீரராக கருதப்படும் முஹம்மட் அலி கடந்த ஜூன் 3ஆம் திகதி காலமானார். இவர் நீண்ட காலமாக 'பார்கின்சன்' எனும் நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார். இறக்கும் போது இவருக்கு 74 வயதாகும். இவர் 70ஆம், 80 ஆம் ஆண்டுகளில் அனைவருக்கும் பிடித்தமான விளையாட்டு வீரராகவும் திகழ்ந்தார்.

முஹம்மட் அலி அமெரிக்க கறுப்பினத்தவர்களுக்கு எதிரான போராட்டத்தினை விமர்சித்தபோது ''அமெரிக்கா என்பது நான். நான் நீங்கள் வெறுக்கும் பிரிவினைச் சேர்ந்தவன். ஆனால் நீங்கள் என்னை விரும்புங்கள். நான் உங்கள் நிறத்தவன் அல்லன். உங்கள் மதத்தினைச் சேர்ந்தவனும் அல்லன். ஆனால் நான் அடையும் வெற்றிகள் எனக்கு மட்டும் உரியவை'' என்று குறிப்பிட்டார். மேலும் அமெரிக்காவில் வாழும் கறுப்பினத்தவர்களுக்காகவும் இவர் குரல் எழுப்பினார்.




## குத்துச்சண்டை வீரனின் வாழ்க்கைப் பதிவுகள்...

### 1942




கெசியஸ் மாசெலஸ் க்ளே என்ற பெயரில் அலி 1942ஆம் ஆண்டு ஜனவரி 17ஆம் திகதி பிறந்தார்.

இவரின் 12ஆவது வயதில் அவரது சைக்கிளை திருடர்கள் களவாடி விட்டனர். திருடர்களைப் பிடித்து இரண்டு குத்துக்களை தன் கைகளால் கொடுக்க வேண்டும் என அவர் பொலிஸ் நிலையத்தில் தெரிவித்தார். இதனை கேட்ட பொலிஸ் அதிகாரியும் குத்துச்சண்டை பயிற்சியாளருமான ஜோ மாட்டின் அலியின் துணிச்சலைக் கண்டு அலிக்கான குத்துச் சண்டை பயிற்சிகளை மேற்கொண்டார்.



அலி தொழில்சார் குத்துச் சண்டை வீரராக போட்டிக் களத்தில் 1961ஆம் ஆண்டு முதன் முதலாக இறங்கினார். இந்த குத்துச்சண்டை போட்டி, சிறுவர் வைத்தியசாலைக்கு நிதி சேகரிக்கும் முகமாக நடைபெற்றது.



### 1964

அலி முதன்முதலாக உலக குத்துச் சண்டை சம்பியன் போட்டியில் சனி லீஸ்ட்டனை தோற்கடித்து 1964ஆம் ஆண்டு வெற்றி பெற்றார்.

### இஸ்லாம் மதத்தினை தழுவல்



இவர் இஸ்லாம் மதத்தினை தழுவிக் கொண்டு தனது பெயரை முஹம்மட் அலி என்று மாற்றிக் கொண்டார். அந்தக் காலப்பகுதியில் அமெரிக்கா வியட்னாம் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதற்காக, வியட்னாமுக்கு சென்று போராட அவர் மறுத்தார். அதன்பின்பே அவர் இஸ்லாம் மதத்தினை தழுவினார். இஸ்லாம் மதத்தினை தழுவியமையால், வியட்னாம் யுத்தத்தில் பங்குபற்ற முடியாமல் போனதுடன், அமெரிக்கர்களின் வெறுப்பினையும், விமர்சனங்களையும் அலி எதிர்கொண்டார். அவருக்கு 3 ஆண்டுகள் குத்துச்சண்டை போட்டிகளில் விளையாட தடை விதிக்கப்பட்டதுடன், உலக சம்பியன் பட்டமும் அவரிடமிருந்து பறிக்கப்பட்டது.






ஜோ பிரேசருடன் போட்டி



ஒபாமா மற்றும் அலி சந்திப்பு



### 1971

மீண்டும் 1971ஆம் ஆண்டு அமெரிக்க உயர்நீதிமன்றம் அலிக்கு சார்பான தீர்ப்பினை வழங்கியது. மீண்டும் குத்துச்சண்டை போட்டிகளில் பங்குபற்ற அவருக்கு வாய்ப்புக் கிட்டியது.

1971ஆம் ஆண்டு மேடிசன் சதுக்கத்தில் நடைபெற்ற போட்டியில் ஜோ பிரேசரிடம் அலி தோல்வியடைந்தார்.

### ரம்பல் இன் த ஜங்கிள்

மீண்டும் உலக சம்பியன் பட்டத்தினை வெல்லும் நோக்கத் தில் அலி 1974ஆம் ஆண்டு ஜோர்ஜ் போமனுடன் மோதி வெற்றி பெற்றார். 'ரம்பல் இன் த ஜங்கிள்' என்று பெயரிடப்பட்ட இந்த போட்டி சயரேவில் நடைபெற்றது.

### 1975

1975ஆம் ஆண்டு பிலிப்பைன்ஸில் மீண்டும் ஜோ பிரேசருடன் போட்டியிட்ட அலி என்றும் மறக்க முடியாத ஒரு போட்டியாளரானார்.

### இறுதிப் போட்டி

அலி இறுதியாக லியோன் ஸ்பின்க்ஸை தோற்கடித்து உலக சம்பியன் பட்டத்தினை 1978இல் பெற்றார்.



தனது புதல்வி லைலாவின் வெற்றியினால் அலி பெருமைப்பட்ட தருணம்



முஹம்மட் அலி, மாட்டின் லூதர் கிங், தென்னாபிரிக்காவின் ஈடு இணையற்ற தலைவன் நெல்சன் மண்டேலா சந்திப்பு கணங்கள்.

### ஓய்வுபெறல்

1981ஆம் ஆண்டு அலி குத்துச் சண்டைப் போட்டியில் இருந்து விலகிக் கொண்டார். அதன் பின்னர் அவர் சமூக சேவையில் தனது வாழ்க்கையினை அர்ப்பணித்தார்.

### 1996



1996ஆம் ஆண்டு ஜோர்ஜியா மாநகரத்திலுள்ள அற்லாண்டா நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு தமது நடுங்கும் கரத்தினால் ஒலிம்பிக் தீபத்தினை அவர் ஏற்றி வைத்தார்.

### 2005




2005ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதியினால் அமெரிக்கருக்கு வழங்கப்படும் மிக உயர்ந்த சிவில் விருதினால் அலி அலங்கரிக்கப்பட்டார்.

### 2016 மறைவு



குத்துச்சண்டை விளையாட்டின்போது, தலையிலும், முகத்திலும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களால் இவருக்கு 'பார்க்கின்சன்' எனும் நோய் உருவாகியது. இதனால், குத்துச்சண்டைப் போட்டிகளில் இருந்து விலகிய அலி 32 ஆண்டுகளாக இந்நோயால் உடல், உள ரீதியில் பெரும் அவஸ்தைக்குள்ளானார். இவர் 2016 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3 ஆம் திகதி இவ் உலகத்தினை விட்டுப் பிரிந்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படத்திலுள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான பகுதிகளை அருகிலிருந்து தெரிவுசெய்து வெட்டி ஒட்டுக



துருக்கெழுத்துப் போட்டி: 194



## மேலிருந்து கீழ்

01. பெண்ணின் ஏழு பருவங்களில் ஒன்று.
02. வறுமை.
03. வெகுமதி.
06. பசளை.
07. கை.(தலைகீழ்)
08. சமாதானத்தின் குறியீடு. (தலைகீழ்)


## இடமிருந்து வலம்

01. கடிதமூலம் நட்புக்கொள்ளும் நண்பர்.
04. (கொடிய) மீன் இனமொன்று.
05. கஷ்டம். (குழம்பியுள்ளது)
06. இலக்கம்.
07. பழம்.
08. தோட்டங்களில் காவலுக்காக செய்து வைக்கும் உருவம். (மாறியுள்ளது)


### துருக்கெழுத்துப் போட்டி 193 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1இ | வை | | 2சா | த | ம் |
| று | | | வி | | ல |
| 3மா | 4த | வி | | னை | 5பூ |
| ப் | கு | 6பு | 7ப | | ம் |
| பு | | | ந் | | 8தா |
| | 9பு | த் | தி | ரி | |


## விடை தருக






குழம்பியுள்ள எழுத்துக்களை ஒழுங்கமைத்து சரியான சொல்லை எழுதுக





## அறிவுக்கு விருந்து (15.06.2016) விடைகள்









A, B பகுதிகளிலுள்ள உருக்களை பிரதான படத்தில் இனங்கண்டு '√' அடையாளமிடுக




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புவி உட்கட்டமைப்பு





புவியில் அங்கிகள் வாழும் பகுதி புவியோடு (crust) ஆகும். இது புவி உட்பகுதியில் மிக மெல்லிய படலமாக உள்ளது. இதன் தடிப்பு 3km-35km ஆகும். இதனை அடுத்துள்ள உட்பகுதி மென்மூடி (mantle) என அழைக்கப்படுகின்றது. இதன் தடிப்பு 3900km ஆக உள்ளது. புவியின் நடுப்பகுதி அகணி என அழைக்கப்படுகிறது. இதன் தடிப்பு சுமார் 3500km ஆகும். இதன் மேற்பகுதி திரவ நிலையில் உள்ள இரும்பு, நிக்கல் போன்ற உலோகங்களால் ஆனது. இதன் வெப்பநிலை சுமார் 4400-5000 பாகை செல்ஸியசுக்கு உட்பட்டதாக இருக்கின்றது. அகணியின் கீழ்ப்பகுதி அதிக அழுத்தம் காரணமாக, திண்ம நிலையில் இருக்கின்றது. இதன் வெப்பநிலை 5000 பாகை செல்சியஸ் ஆக உள்ளது. இது சூரிய மேற்பரப்பின் வெப்பநிலைக்கு சமனானது என்பதும் குறிப்பிடத்தக்கது.

நாம் எத்தகைய குறிக்கோள் தொடர்பில் தீவிரமாக இடைவிடாது சிந்திக்கின்றோமோ அந்த நோக்கத்தை நிறைவு செய்வதற்கு எம்மை அறியாமலேயே எமது ஆழ்மனம் தீவிரமாக செயற்பட முனைகின்றது. அவ்வாறே, எமது நடத்தைகள் மற்றும் செயற்பாடுகள் நாம் நினைக்கும் குறிக்கோளை அடைவதற்கு ஆழ்மனத்தால் முடுக்கி விடப்படுகின்றது.

நாம் பரீட்சையில் சித்தி அடைய வேண்டும் என தீவிரமாக சிந்திப்பதன்மூலம் எழும் முயற்சியால் நாம் பரீட்சையில் சித்தி அடைந்து விடுகிறோம். எவ்வாறு எனில், எமது ஆழ்மன உணர்வுகள் பரீட்சையில் சித்தி அடைவதற்கான அடிப்படை செயற்பாடுகளை எம்மை அறியாமலேயே



## குறிக்கோளும் தீவிர சிந்தனைகளும்

தூண்டிவிடுகின்றது. இங்கு பரீட்சை தொடர்பில் அடிப்படை செயற்பாடு என்பது கற்பிக்கும்போது உன்னிப்பாக அவதானித்தல், குறிப்புக்களை எடுத்து வாசித்தல், மனச் சோர்வு இன்றி பரீட்சை வினாத்தாள்களை இடைவிடாது பயிற்சி செய்தல், விடாமுயற்சி, விருப்பு, தேடல் என்பனவற்றைக் குறிப்பிடலாம். இத்தகைய விடயங்கள் தொடர்பான தீவிர மனநிலைக்கு ஆழ்மன உந்தலால் ஏற்படும் விடா முயற்சியே காரணமாகும். இத்தகைய ஆழ்மன உணர்வுக்கு கற்றல் தொடர்பில் இடைவிடாத அதி தீவிர சிந்தனையே அடிப்படையாகும்.

எவ்வாறாவது சுயமுயற்சியுடன் கற்க வேண்டும்; பரீட்சைகளில் சித்தி அடைய வேண்டும் என்று தீவிரமாக சிந்தியுங்கள். ஒரு வைத்திய நிபுணராகவோ, பொறியியல் நிபுணராகவோ அல்லது ஏதாவது உயர் பதவிக்குரியவராகவோ வர வேண்டும் என்று இடைவிடாது சிந்தியுங்கள். விடா முயற்சி செய்யுங்கள். நிச்சயமாக உங்கள் நோக்கத்தை நீங்கள் விரைவாக அடைந்துவிட முடியும்.




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
'விஜய்'
த.பெ.எண் 2087
கொழும்பு



ர.புவிதா,
கிளி/முருகானந்தா கல்.,
முரசுமோட்டை.



அ.சபேஷ்,
இராமகிருஷ்ணா வித்.,
அக்கரைப்பற்று.



எ.றிஸ்னி அஹமட்,
தி/மூதூர் மத்திய கல்., (தே.பாட)
மூதூர்.



ந.வர்சான்,
ஸ்ரீ கோணேஸ்வரா இந்.கல்.,
திருகோணமலை.



ஜீவன் லிங்கேஸ்வரன்,
கோட்லோஜ் த.வித்.,
நுவரெலியா.



எம்.சுலைமான்,
அல்-அமீன் மத்திய கல்.,
அலபடகம.



எம்.ஹிஃப்லான்,
கணேவல்பொல மு.ம.வித்.,
கெக்கிராவை.



எஸ்.விமலஹாசன்,
ப/வேவல்ஹின்ன த.வித்.,
தெமோதரை.



ம.ஜெயப்பிரதாபன்,
ஊவா ஹைலன்ஸ் தோட்டம்;
பண்டாரவளை.



ஜி.துசான்,
நீர்கொழும்பு விஜயரத்தினம்
இந்.ம.கல்., நீர்கொழும்பு.



றிஸ்னியா,
அல்-மனார் தேசிய பாட.,
கண்டி.



ஆர்.பிரசாந்தகுமார்,
சென் மேரிஸ் கல்.,
பொகவந்தலாவ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச காவல்துறையின் ஆரம்பம்





இன்டர்போல் என்பது சர்வதேச காவல்துறையை குறிப்பதாகும். ஆங்கிலத்தில் International Criminal Police Organization என்பதன் சுருக்கமே இன்டர்போல் என்பதாகும். ஒரு குற்றவாளி பாரிய குற்றங்களை புரிந்துவிட்டு தனது நாட்டிலிருந்து வேறொரு நாட்டுக்கு தப்பித்துவிட்டால் அந்த குற்றவாளி மறைந்து வாழும் நாட்டுக்குள் வேறு நாட்டு காவல்துறையினர் சென்று கைது செய்ய முடியாது. அத்தகைய சூழ்நிலைகளில்தான் 'இன்டர்போல்' அந்த குற்றவாளிகளை கைது செய்து குற்றம் சுமத்தப்பட்ட நாட்டுக்கு அனுப்பி வைக்கும் பொறுப்பை வகிக்கின்றது. சர்வதேச சட்டவிதிகளின்படி, ஒரு நாட்டுக் காவல் படை இன்னொரு நாட்டுக்குள் புகுந்து குற்றவாளிகளை கைது செய்ய அனுமதி கிடையாது. இத்தகைய வாய்ப்பை பயன்படுத்தி முதலாம் உலகப் போர் முடிந்தபின் ஐரோப்பாவைச் சேர்ந்த பல குற்றவாளிகள் பிற நாடுகளுக்கு சென்று தப்பி வாழ்ந்தனர். இதனைத் தடுக்கும் நோக்குடன், ஆஸ்திரியாவின் வியன்னாவை சேர்ந்த காவல் அதிகாரி ஜோஹான் ஸ்கோப்பர் என்பவர் பல நாடுகளின் பன்னாட்டு காவல் துறை அதிகாரிகளின் கூட்டத்தைக் கூட்டினார். அதில் எடுக்கப்பட்ட முடிவின்படி 1923 ஆம் ஆண்டு இன்டர்போலை நிறுவினார். இதன் முதல் தலைவராக அவரே தெரிவுசெய்யப்பட்டார். தற்போது இதன் தலைமையகம் பிரான்சில் உள்ள லியான்ஸ்ஸில் அமைந்துள்ளது. 190 நாடுகள் அதில் உறுப்பினர்களாக உள்ளன. வேறு நாடுகளுக்கு சென்று வாழும் குற்றவாளிகளைக் கைதுசெய்து ஒப்படைப்பது மட்டுமே 'இன்டர்போலின்' கடமை ஆகும். இதேவேளை, எந்தவிதத்திலும் அரசியல் நோக்கத்திற்காக இந்த காவல்துறை பிரிவு செயற்படாது என்பதும் குறிப்பிடத்தக்கது.

-(அ)



தலைமையகம்





Dr.ஜோஹான் ஸ்கோப்பர்

உலகத்தில் உயரமான இடத்தில் உள்ள ஹெலிகாப்டர் தளம் எங்கு அமைந்துள்ளது என உங்களுக்கு தெரியுமா?



இந்தியா- பாகிஸ்தான் எல்லையிலுள்ள சியாச்சின் பனிமலையின் உச்சியில் அமைந்துள்ள 'பாயின்ட் சோனம்' எனும் இடத்திலேயே, இந்த ஹெலிகாப்டர் தளம் அமைந்துள்ளது. இது கடல் மட்டத்திலிருந்து 6400 மீற்றர் உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

## வெல்லுங்கள்! விஜய் – தூவானம் வழங்கும் வாரம் 3 பரிசில்கள்!

★ Practical English Learning Software DVD




★ 4000 English Letter Writing Software




★ 8 GB Pen Drive



புதன்தோறும் வெளிவரும் 'விஜய்' பத்திரிகைகளை நன்கு வாசித்து அதனை தொடர்ந்து வரும் ஒவ்வொரு புதன்கிழமையிலும் 'Thoovaanam' SMS ஊடாக கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்கத் தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

★ 'Thoovaanam' SMS ஊடாக, கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் மாத்திரமே நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாராந்தம்...

★ ஆங்கிலம் கற்கும் மென்பொருள் DVD

★ 4000 ஆங்கில மாதிரிக் கடிதங்கள் அடங்கிய மென்பொருள்

★ 8GB பென் டிரைவ் போன்றன இலவசமாக வழங்கப்படும்.

*15.06.2016* 'தூவானம்' கேள்விக்கான விடை:
நேச்சர்
**Pendrive** வெற்றியாளர்:
எஸ்.அகிலத் திவாகரன்,
44/15, ஸ்ரீ தம்மதஸ்ஸி மாவத்தை,
கண்டி.

'Thoovaanam' SMS செயற்படுத்தும் முறை

Write Message
**F Thoovaanam என Type செய்து 40404 எனும் இலக்கத்திற்கு SMS செய்யவும்**

அனுப்ப வேண்டிய முகவரி:
Pen Drive போட்டி
(29.06.2016)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

**இவ்வார கூப்பன்:**
**29.06.2016**
விடை: ..............................
பெயர்: ..............................
முகவரி: ..............................
தெ.பே.இல: ..............................
பாடசாலை: ..............................
தரம்: ..............................

..................
கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் தமிழ் சான்றோர்கள்

# புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை

இலங்கையின் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மண்டூரில் **1899** ஆம் ஆண்டு தை மாதம் **8** ஆம் திகதி ஏகாம்பரப்பிள்ளை வண்ணக்கர் தம்பதியர்க்கு பெரியதம்பிப்பிள்ளை மகனாகப் பிறந்தார்.

இவர் ஆரம்பக் கல்வியை மண்டூரிலுள்ள உவெஸ்லியன் மிஷன் தமிழ் பாடசாலையில் கற்றார். தமது உயர் கல்வியை கல்முனையிலும் பின்னர் யாழ்ப்பாணத்திலுள்ள நாவலர் காவியப் பாடசாலையிலும் பயின்றார். இக்கால கட்டத்தில் சுவாமி விபுலானந்தரிடமும் இவர் கல்வி பயின் றுள்ளார்.

பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் **1926** ஆம் ஆண்டில் திருகோணமலை இந்துக் கல்லூரி, கத்தோலிக்க ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, மட்டுநகர் அரசினர் உயர்தரக் கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியராகவும் விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார். இவர்



மட்டக்களப்பு மாவட்டக் கவிதைப் பாரம்பரியத்தின் சிறப்பு மிக்க ஒருவராக விளங்கியமையும் குறிப்பிடத்தக்கது. இவர் வெண்பா யாப்பினைக் கையாண்டு கவிதை இயற்றுவதில் மிகவும் திறமைமிக்கவர். அத்துடன், எளிமையான சொற்களைக் கையாண்டு அனைவருக்கும் இலகுவாக விளங்கக்கூடிய வகையில் கவிதைகளைப் படைப்பதிலும் இவர் வல்லவர்.

பகவத்கீதை மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, அப்பாகங்களில் கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்கள் இவரது கவிப்புலமையைப் பறை சாற்றுகின்றது. இதனால், **1950** ஆம் ஆண்டில் மட்டுநகர் தமிழ் கலைமன்றம் இவருக்கு 'புலவர்மணி' எனும் விருதை வழங்கி கௌரவப்படுத்தியது.

இவர் 'விபுலானந்த மீட்சிப்பத்து' 'யாழ்நூலில் தந்தோன்', 'ஈழமணித் திருநாடு', 'கொக்கட்டிச்சோலை தான்தோன்றிஸ்வரர் பதிகம்', முதலிய பல கவிதை நூல்களையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய 'கர்மயோகம்' எனும் கவிதை நூல் **1962** இல் சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றது.

இவ்வாறு தமிழ் தாய்க்கு கவிதையால் தொண்டாற்றிய புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் **1978** ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் **2** ஆம் திகதி இவ்வுலகை விட்டு நீங்கினார்.

## விஜய் மாணவர் கழகம்



அங்.இல: 6172

ஹ.சைஃப்யுட் ஹக்,
சாஹிரா தேசிய பாட.,
அனுராதபுரம்.



அங்.இல: 6173

எம்.முன்ஸிஃப்,
பதுரியா ம.கல்.,
மாவனல்லை.



அங்.இல: 6174

அ.பாசித்,
மட்/அலிகார் ம.கல்.,
மட்டக்களப்பு.



அங்.இல: 6175

ஆர்.அம்ஹர்,
அல்-பத்ரியா மகா வித்.,



அங்.இல: 6176

ஆர்.நுஹா,
நுரைச்சோலை மத்.மகா.வித்.,
நுரைச்சோலை.



அங்.இல: 6177

அ.அம்ஜாத்,
கிண்ணியா மத்.கல்.,
திருகோணமலை.

# மெசிடோனியா




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# மனிதன் நாகரிக யுகத்தில் பிரவேசித்த விதம்

குரங்கைப்போல் வாழ்க்கையை நடத்திய மனிதன் முதன்முதலாக தனது மனித லட்சணத்தை 'ஒஸ்ட்ரோ லோபித்திகஸ்' எனும் மனிதன் மூலமே வெளிப்படுத்தினான். இந்த மனித இனம் நான்கு மில்லியன் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்தது. அன்று முதல் வேடுவர் காலம், இடையர் காலம் ஆகியவற்றைக் கடந்த மனிதன் இற்றைக்கு 12,000-10,000 வருடங்களுக்கு இடையில் வேளாண்மை யுகத்தில் பிரவேசித்தான். அதன் பின்னர் 6000-5000 வருடங்களுக்கிடையில் மனிதன் மிக வேகமாக நவீன நாகரிகங்களை தோன்றுவித்தான். அதற்கமைவாக, பல்வேறுபட்ட ஆயுதங்கள், உபகரணங்கள் உற்பத்தி செய்யப்பட்டதோடு, கைத்தொழிலும் உருவாகியது. நகரங்கள் நிர்மாணிக்கப்பட்டதோடு, ஆட்சிமுறைகளும் தோன்றின. இதனுடன் கட்டடக்கலை, விஞ்ஞான தொழில்நுட்பம் போன்ற விடயங்களும் தோன்றின. அத்தோடு, சமயங்களும் தோன்றின. இவ் அனைத்து நாகரிகங்களும் நதிக்கரைகளில் தோற்றம் பெற்றன.

அனைத்து நதிக்கரைகளிலும் விவசாயத்திற்கு தேவையான நீரும் செழிப்பான மண் வளமும் இருந்ததே இங்கு நாகரிகங்கள் தோன்றக் காரணமாகும். அவற்றில் முதலாவதும் மாபெரும் நாகரிகங்களாக கருதப்பட்ட நைல் நதி நாகரிகம், மெசபொத்தேமிய நாகரிகம், சிந்து நதி நாகரிகம் மற்றும் குவாங்கோ நதி நாகரிகம் என்பனவற்றைக் குறிப்பிடலாம். இத்தகைய நாகரிகங்கள் பற்றிய விபரங்களை இங்கு நீங்கள் அறியலாம்.


| | மெசபொத்தேமியா கி.மு. 3100 முதல் | நைல் நதிப் பள்ளத்தாக்கு கி.மு. 3150 முதல் | சிந்து நதிப் பள்ளத்தாக்கு கி.மு. 1300 முதல் | குவாங்கோ கி.மு. 1700 முதல் |
|---|---|---|---|---|

## சூழல் நிலை




### மெசபொத்தேமியா

- ★ யூப்ரடீஸ், டைகிரிஸ் நதிகள் பெருக்கெடுத்து ஓடுதல்.
- ★ இயற்கைச் சூழல் சாதக நிலையில் இல்லை.
- ★ இயற்கை வளம் வரையறுக்கப்பட்டிருந்தது.




### நைல் நதிப் பள்ளத்தாக்கு

- ★ நைல் நதி பெருக்கெடுத்துப் பாய்தல்.
- ★ 'பாலைவனம்' எனும் இயற்கைச் சூழ்நிலை பாதகமாக இருத்தல்.




### சிந்து நதிப் பள்ளத்தாக்கு

- ★ சிந்து நதி பெருக்கெடுத்துப் பாய்தல்.
- ★ இயற்கை சூழலுக்கு பாலைவனமும் மலைகளும் பாதகமாக அமைந்தன.
- ★ பருவக் காற்று நிலவியது.




### குவாங்கோ

- ★ குவாங்கோ நதி பெருக்கெடுத்துப் பாய்தல்.
- ★ இயற்கைச் சூழலுக்கு பாலைவனமும் மலைகளும் இடையூறாக அமைந்தன.
- ★ புவியியல் ரீதியாக தனிமையான ஒரு பகுதி.




## ஆட்சி அதிகாரம்



### மெசபொத்தேமியா

- ★ மன்னனால் ஆட்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.
- ★ நகரங்களையும் குடியேற்றங்களையும் ஐக்கியப்படுத்தி மன்னனின் ஆதிக்கம் நிலவியது.



### நைல் நதிப் பள்ளத்தாக்கு

- ★ பாராவோக்களினால் அரசாட்சி மேற்கொள்ளப்பட்டதோடு, அவர்கள் தெய்வங்களாகக் கருதப்பட்டனர்.
- ★ அவர்களுக்கு பிரமிட்கள் கட்டி எழுப்பப்பட்டன.



### சிந்து நதிப் பள்ளத்தாக்கு

- ★ மன்னர் ஆட்சிமுறை நிலவியது.
- ★ திட்டமிட்டு அமைக்கப்பட்ட பல நகரங்கள் இருந்தன.



### குவாங்கோ

- ★ குடும்பமும் பொதுமக்களும் முக்கிய இடத்தை வகித்தனர்.
- ★ சீர்திருத்திய கோட்ட நிர்வாக முறையொன்று நிலவியது.
- ★ அரச கட்டளை தெய்வக் கட்டளையாக கருதப்பட்டது.



## விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்




### மெசபொத்தேமியா

- ★ ஒலிக் குறியீடுகளை பயன்படுத்தினர்.
- ★ முன்னேற்றகரமான நீர்ப்பாசன தொகுதி நிலவியது.
- ★ வெண்கலப் பொருட்களை உற்பத்தி செய்தனர்.
- ★ சக்கரத்தை உருவாக்கினர்.
- ★ நீர்க்கப்பல் தயாரிப்பது பற்றி அறிந்திருந்தனர்.



### நைல் நதிப் பள்ளத்தாக்கு

- ★ உருவக்குறியீடுகளைப் பயன்படுத்தினர்.
- ★ பிரமிட்டுகளை நிர்மாணித்தனர்.
- ★ முன்னேற்றகரமான மருத்துவ விஞ்ஞானம் நிலவியது.
- ★ கணிதம் குறித்து அதிக அறிவு இருந்தது.



### சிந்து நதிப் பள்ளத்தாக்கு

- ★ எழுத்துக்கலை இருந்தது. எனினும், இன்றுவரை அவற்றை வாசித்துப் புரிந்து கொள்ள முடியவில்லை.
- ★ முன்னேற்றகரமான நகர நிர்மாண முறைகள் இருந்தன.
- ★ முன்னேற்றகரமான நீர் குழாய் தொகுதியை பயன்படுத்தினர்.



### குவாங்கோ

- ★ எழுத்துக்கலை ஒன்றிருந்தது.
- ★ பட்டுக்கைத்தொழில் நிலவியது.
- ★ பணப் பயன்பாட்டை அறிந்திருந்தனர்.
- ★ இரும்புக் கைத்தொழிலை மேற்கொண்டனர்.



(-அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் கோபத்தோடு வீசும் கல்



காலத்திற்குக் காலம் பூமியை நோக்கி வரும் விண்கற்கள் பற்றியும், வரும் வழியிலேயே அவை எரிந்து ஆவியாகி விடுவதையும் நீங்கள் அறிந்திருப்பீர்கள். 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை பலரும் பூமியை நோக்கி வரும் இத்தகைய விண்கற்களை 'கடவுள் கோபத்தோடு வீசும் கல்' என்றே கருதிவந்தனர். பூமியை நோக்கி வருகின்ற விண்கற்களில் மூன்றில் இரண்டு பங்கு விண்கற்கள் கடலில் விழுந்துவிடுகின்றன. இதனால், அவற்றால் பெருமளவில் பாதிப்புகள் ஏற்படுவதில்லை. விண்கற்கள் பூமியில் விழுந்து பாதிப்புகளை ஏற்படுத்திய சம்பவங்கள் மிகவும் அரிதாகவே நிகழ்ந்துள்ளன.

# அதிர்ஷ்ட நம்பிக்கைகள்

ஸ்பெயின் நாட்டு மக்கள் ஒவ்வொரு புத்தாண்டு பிறக்கும் முன்பும் நள்ளிரவில் பன்னிரண்டு திராட்சைப்பழங்கள் சாப்பிடுவார்களாம்!






அப்படி சாப்பிட்டால், பிறக்கும் அந்த ஆண்டு அவர்களுக்கு வளமாக அமையும் என்பதோடு, வீட்டில் அதிர்ஷ்டங்கள் நிகழும் என்பதும் அவர்களின் பாரம்பரிய நம்பிக்கை ஆகும்.

ஆமை புகுந்த வீடு அதிர்ஷ்டமானது என்பது சீனர்களின் நம்பிக்கையாக உள்ளது. இது தவிர, ஆமையை செல்லப்பிராணியாக வளர்ப்பதும், வீட்டில் ஆமை ஓடு வைத்திருப்பதும் நீண்ட ஆயுளைத் தருவதோடு; அமைதி, அறிவு என்பவற்றின் அடையாளமாக திகழ்வதாகவும் சீனர்களிடையே நம்பிக்கை நிலவுகின்றது.



# இவ்வார கார்ட்டூன் படம்









# கொல்ஃப் மைதானத்திற்கு வந்த ராட்சத அலிகேட்டர்

அமெரிக்காவின் ஃப்ளோரிடா மாநிலத்தின் பெல்மெட்டோ பகுதியிலுள்ள பஃபலோ க்ரீக் கொல்ஃப் மைதானத்திற்குள் அண்மையில் ராட்சத அலிகேட்டர் ஒன்று நுழைந்தது. இதனையடுத்து, அங்கு பெரும் பதற்றம் நிலவியது. இந்த கொல்ஃப் மைதானம் சதுப்பு நிலப்பகுதியில் அமைந்துள்ளதுடன், அப்பகுதியில் அலிகேட்டர்கள் பரவலாக வசித்து வருகின்றன. ஆயினும், அங்குள்ள அலிகேட்டர்களுடன் ஒப்பிடும்போது, இதுவொரு ராட்சத அலிகேட்டராகும் என அங்கிருந்தவர்கள் குறிப்பிடுகின்றனர். காரணம், ஃப்ளோரிடாவில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள அலிகேட்டர்களில், மிகவும் நீளமான அலிகேட்டரின் நீளம் 14 அடியாகும். ஆனால், கொல்ஃப் மைதானத்திற்கு வந்த இந்த அலிகேட்டர் 16 அடி நீளம் கொண்டது எனக் கூறப்படுகின்றது. ஆக, இந்த பெரிய அலிகேட்டர் சதுப்பு நிலப் பகுதியில் இருந்துதான் வந்திருக்குமா? என்று அங்கிருந்தவர்கள் ஆச்சரியப் படுகின்றனர்.







இப்பத்திரிகை கொழும்பு -2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2016, ஜூன் 29 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday June 29, 2016.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org